
R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
# புதினம்
PUTHINAM
மலர் 24 இதழ் 5
MAY 2019

For all your legal requirements
1. Immigration and Asylum
2. Human Rights Act challenges and European Law
3. Family Law
4. Criminal Law
5. Landlord and Tenants
6. Civil Litigation
7. Public Law
46 High street
Colliers wood
London SW19 2BY.
Tel: 020 8544 9285
Fax: 020 8542 9530
Email:llsolicitors@hotmail.com
Although this is a new firm of solicitors, it is run by experienced legal practitioners of over 25 years standing.

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
WESTERN Jewellers
Tooting Branch:
230 Upper Tooting Road,
London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909





THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# மதம் பிடித்த அதர்மம்!

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இலங்கையில் நடந்த கொடூரமான கோரக் கொலைகள் தாங்கொணாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது.

புனிதமான இறைவன் பெயரைச் சொல்லிக்கொண்டு மதம் பிடித்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்த அதர்மம் ‘அரங்கேறி’யிருக்கிறது.

ஒரே நேரத்தில் வெவ்வேறு இடங்களில் நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் எளிதாக நடாத்துப்படக் கூடியவை அல்ல. நீண்ட நெடுங்காலம் திட்டமிட்டு நடாத்தப்பட்ட படுபயங்கர தாக்குதல்.

இந்திய புலனாய்வுப் பிரிவுகள் அளித்த ரகசிய தகவல்கள் இலங்கை அதிகாரிகளுடன் சம்பவங்களுக்கு முன்னதாகப் பகிரப்பட்டது. ‘முன்னாள் புலி’களினால் ஏதாவது நடக்கலாம் என்றும், அது குறித்தே நடவடிக்கை எடுப்பதாகவும் பதில் வழங்கப்பட்டிருக்கிறது. இஸ்லாமினால், ஆபத்து ஏற்படமாட்டாது என்று நம்பினார்கள்.

உலகத்தையே உலுக்கிய இந்தக் கோரக் கொலைகள் கிறித்தவ சிங்கள-தமிழ் மக்களையும், விடுமுறையைக் கழிக்கச் சென்றிருந்த வெளிநாட்டவர்களையும் உள்ளடக்கி பலி கொண்டு, அனைவரையும் கண்ணீரில் மிதக்க வைத்துவிட்டது.

‘நீயா? நானா?’ என்று ‘இழுபறி’ ஆட்சி நடாத்தும் ஸ்திரமற்ற பின்னணியும் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களோடு தொடர்புடையவையாக இருந்திருக்குமா என்ற சந்தேகங்களில் உண்மையில்லை என்று ஒதுக்கி விடவும் முடியாது. தமிழினத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக் கலவரத்தினால் இலங்கைத் தீவில் லட்சோப லட்சம் மக்கள் அழித்தொழிக்கப்பட்டார்கள். அரசின் இனத் துவேஷத் தூண்டுதலினால் உயிர் நீத்த தமிழர்கள் எண்ணில் அடங்கா. உயிரோடு எரிக்கப்பட்ட கொடூரங்களையும், மானபங்கப்படுத்தப்பட்ட தமிழ்ப் பெண்களின் அவலங்களையும் இலகுவாக மறந்துவிட முடியாது.

இலங்கை அரசுக்கு எதிராக புலிகள் நடத்திய போராட்டத்தின்போது, அப்பாவி மக்களை ராணுவம் சுட்டுக் கொன்றபோது கூட அந்த 30 ஆண்டுகால யுத்தம் நடத்தப்படுவதற்கான காரணத்தை மக்கள் விளங்கிக் கொண்டிருந்தார்கள்.

புலிகளின் முக்கிய தாக்குதல் நடாத்தப்படுகிற சமயங்களில் எல்லாம் தலைவர் அறிவுறுத்தலில் மிக்க கவனமாக நடாத்தப்பட்டதை அவதானிக்க முடியும்.

உதாரணம்: கட்டுநாயக்கா விமானநிலையத் தாக்குதலில் வெளிநாட்டவர்-அப்பாவி மக்கள்-ஊழியர்கள் எவருமே பாதிக்கப்படவில்லை.

மதவாதமும், இனவாதமும் தலைவிரித்தாடும் அரசியல் ஆதாய பொறுக்கித்தனத்தை அவ்வப்போது விரட்டியடிக்காததால் ஏற்பட்ட இவ்வித கொடூரமான கோரக் கொலைகளுக்குப் பொறுப்பை ஏற்கத்தான் வேண்டும். ●


லண்டனில் திரைக்கு வருகிறது
1 JUNE SATURDAY 19:00hrs BOLEYN CINEMAS 7-11 barking road, East ham, London E61PW
2 JUNE SUNDAY 13:30hrs SAFARI CINEMA HARROW 2 Station Rd, Harrow London, HA1 2TU
Contact : +44 7951 950843 / www.oliparappu.com
தமிழீழ தமிழக கனடிய கலைஞர்களின் உருவாக்கத்தில் யாழ் மண்ணிலும் கனடிய மண்ணிலும் படமாக்கப்பட்ட முதல் திரைப்படம்
ஒருத்தி



செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
மே 7, 8 திகதிகளில்
அட்ச திருதியை முன்னிட்டு
நகைகள் அனைத்துமே
நம்ப முடியாத விலை கழிவில்
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795



டயபட்டிஸ் சலன்ஜ்
ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு
100% கட்டுப்படுத்தலாம்
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
மருத்துவ ஆலோசனைக்கு: 02081441553
Viber: 0044 7833341693 skype: homoeocare
வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com



தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448



Lyca TV

# உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட இணைப்புச் சந்தா

£89

15 மாதங்கள்

புதுப்பித்தல்

£69

15 மாதங்கள்

SET TOP BOX INCLUDED



60க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

5000க்கும் அதிகமான தமிழ் & ஹிந்தி திரைப்படங்கள்

TENTKOTTA

1000க்கும் அதிகமான தமிழ் திரைப்படங்கள்

✓ ஒவ்வொரு வாரமும் புத்தம் புதிய திரைப்படங்கள் ✓ 4K / HD / 5.1 DOLBY தரத்தில் திரைப்படங்கள் ✓ ஆங்கில உபதலைப்புக்களுடன் திரைப்படங்கள



EROS NOW

4000க்கும் அதிகமான தமிழ் & ஹிந்தி திரைப்படங்கள்

✓ ஒவ்வொரு வாரமும் புத்தம் புதிய திரைப்படங்கள் ✓ HD தரத்தில் திரைப்படங்கள் ✓ விளம்பர நேரவிரயம் இல்லை



SUBSCRIBING TO LYCATV IS EASY!

CALL OUR 24/7 CUSTOMER SERVICE ON

0207 132 2727

www.lycatv.tv

# உயிர்த்த ஞாயிறு நாள் வழிபாட்டுக்கு அரசியல்வாதிகள் ஏன் செல்லவில்லை?

**குண்டுத்தாக்குதல் பற்றி முற்கூட்டியே போதிய தகவல் கிடைத்திருந்தும் அதனைத் தடுக்க புலனாய்வுத்துறை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கும் அப்பால், உயிர்த்த ஞாயிறு திருநாள் வழிபாட்டுக்கு அரசியல்வாதிகள் எவரும் செல்லாதது ஏன் என்ற கேள்விக்கு யார் பதில் கூறுவர்?**

இலங்கையில் அவசர காலச் சட்டம் மீண்டும் பிரகடனமாகியுள்ளது. ஏற்கனவே நடைமுறையிலுள்ள பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்துக்கு மேலதிகமாக இது.

இரவு நேரங்களில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எவ்வளவு நாட்களுக்கு இது தொடரும் என்று இப்போதைக்குக் கூற முடியாது.

இராணுவமும் பொலிசாரும் இணைந்து காவற்கடமைகளையும், திடீர்ச் சோதனைகளையும் ஆரம்பித்துள்ளனர். தேடுதல் நடவடிக்கைகள் இன்னொரு புறம்.

சோதனைச் சாவடிகள் மீண்டும் முளைத்துள்ளன. அடையாள அட்டைச் சோதனை என்ற பெயரில் கெடுபிடிகள் தொடங்கியுள்ளன.

வீதிகளில் தனித்து நிற்கும் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் வெடிக்க வைக்கப்படுகின்றன, தேசிய பாதுகாப்பு என்ற பெயரில். அநாதரவாக உள்ள பொதிகள் பொசுக்கப்படுகின்றன.

பாடசாலைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் அவசரகால விடுமுறை. நிலைவரத்தைப் பொறுத்து மீண்டும் திறக்கப்படும்.

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களில் 359 பேர் பலியாகி, 500க்கும் அதிகமானோர் காயமடைந்ததன் பின்னரான நடவடிக்கைகள் இவை.

இயலாமையை ஒப்புக்கொள்ள விரும்பாத வெட்கம்கெட்ட சிங்களதேசத் தலைமைகள், போட்டியிட்டுக் கொண்டு அறிக்கைகள் வாயிலாக முரண்படுகின்றன.

ஏப்ரல் 21ஆம் நாள் காலையிலிருந்து மதியம்வரை மூன்று தேவாலயங்களிலும் ஐந்து விடுதிகளிலும் அடுத்தடுத்து வெடித்த குண்டுகளால் வழிபாட்டில் ஈடுபட்டவர்களும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் அப்பாவிக் குடிமக்களும் கொல்லப்பட்டனர்.

கொலையுண்டவர்களில் 45 வரையானோர் சிறார்களென யுனிசெஃப் அறிவித்துள்ளது. ஏறத்தாழ அதேயளவு தொகையினர் 19 நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டினர். இவர்களுள் 11 பேர் இந்தியர். காயமடைந்தவர்களில் 12 பேர் வெளிநாட்டினர். மேலும் 16 வெளிநாட்டவரைக் காணவில்லை.

குண்டுத்தாக்குதல் நடைபெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே இந்தியப் புலனாய்வுத்துறை இலங்கைப் புலனாய்வுத்துறையினருக்கு எச்சரிக்கைத் தகவல் கொடுத்ததை எல்லாம் முடிந்த பின்னரே இலங்கை அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

தமக்கு இதுபற்றி எதுவுமே தெரிவிக்கப்படவில்லையென்று முதலில் பகிரங்கமாகக் கூறியவர் நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

தனக்கும்கூட எதுவுமே தெரிவிக்கப்படவில்லையென்று அடுத்துக் கூறியவர் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் றூவான் விஜேவர்த்தன. இவர் பிரதமர் ரணிலின் தாய்மாமனின் மகன். அதாவது மைத்துனர்.

2018 அக்டோபர் மாத உள்நாட்டு அரசியல் புரட்சியின் பின்னர் ரணிலின் கட்சியிடமிருந்த சட்டம் ஒழுங்கு அமைச்சை பறித்து தமதாக்கிக் கொண்ட ஜனாதிபதி மைத்திரி, உளவுத்துறைக்குக் கிடைத்த முற்கூட்டிய தகவலை வேண்டுமென்றே ரணிலுக்கு மறைத்ததாக சந்தேகம் பரவலானது.

ஆனால், உளவுத்துறைக்கு இந்தியத் தரப்பு வழங்கிய முற்கூட்டிய எச்சரிக்கைத் தகவல் தமக்குக்கூட தெரிவிக்கப்படவில்லையென்று மைத்திரி சொன்னபோதுதான் ஆட்சியிலிருக்கும் ஓட்டை தெரியவந்தது.



சொல்லப்போனால் இலங்கையில் உளவுத்துறை அல்லது புலனாய்வுத்துறை என்பது ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் மற்றும் அமைச்சர்களுக்கு அப்பாற்பட்ட தனியான ஓர் அரசாங்கமாக இயங்குவதென்பது இதன் பின்னரே பலருக்கும் தெரியவந்தது. இதனையிட்டு ஜனாதிபதி மைத்திரி தலைகுனிய வேண்டும். அல்லது பதவி துறந்திருக்க வேண்டும்.

இது இப்படியிருக்க, உளவுத்துறைத் தகவல் வேறு வழியாக முற்கூட்டியே தங்களுக்குத் தெரிய வந்ததென அமைச்சர்கள் ஹரின் பெர்னான்டோவும், மனோ கணேசனும் ஊடகங்களுக்குக் கூறி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தினர்.

இது உண்மையானால், இவர்கள்கூட இத்தகவலை ஏன் தங்கள் பிரதமருக்குத் தெரிவிக்கவில்லையென்ற கேள்வி எழுகின்றது.

தனது பாதுகாப்பு அதிகாரிகள் தனக்கு இதனைத் தெரிவிக்கவில்லையே என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச அங்கலாய்த்துக் கொண்டதை பத்திரிகைகள் மறைக்க விரும்பவில்லை.

வெடித்த குண்டுகளுக்குள் இரத்தத்தில் நனைந்து சிதறிக் கிடந்த சடலங்களை முன்னிறுத்தி அரசியல்வாதிகளின் அறிக்கைப் போர் தொடர்கின்றது.

அமைச்சர்கள் ராஜித சேனரத்ன, கபீர் ஹசீம், மங்கள சமரவீர, லக்ஸ்மன் கிரியெல்ல உட்பட பலர் தம்மிஷ்டப்படி தங்களையும் தங்கள் கட்சியையும் காப்பாற்றும் அறிக்கைகளை வெளியிடுகின்றனர்.

தேசிய தௌவீத் ஜமாத் என்ற இயக்கத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட ஏழு பேர் குண்டுத் தற்கொலைதாரிகள் என்று படங்களுடன் விபரம் வெளியாகியுள்ளது. ஐஎஸ்ஐஎஸ் அமைப்பும் அறிக்கை மூலம் உரிமை கோரியுள்ளது. மைத்திரியின் நெருங்கிய சகாக்களான கிழக்கு மாகாண ஆளுனர் ஹிஸ்புல்லா, மேல் மாகாண ஆளுனர் ஆசாத் சாலி, அமைச்சர் றிசாத் பதியுதின், நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோருக்கும் குண்டுத் தாக்குதல் நடத்தியவர்களுக்குமிடையில் இறுக்கமான தொடர்பு இருப்பதாக நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிரணியினர் பலரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ சுமந்திரன், ஹிஸ்புல்லாவை நோக்கி விரல் சுட்டி குற்றஞ்சாட்டியுள்ளார். எதுவுமே கேட்காததுபோல எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தையும், சர்வமத தலைவர்கள் கூட்டத்தையும் நடத்துகிறார் மைத்திரி.

இதுபோதாதென்று நாட்டு மக்களுக்கு தினமும் உரையாற்றுவது வேறு.

மைத்திரியும் ரணிலும் ஒரே ஆட்சியின் இரு தூண்கள் என்பதை மறந்து தனித்தனியாக தம்வழி சென்று கொண்டிருக்கின்றனர்.

இதற்கு உதாரணமாக வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் ராஜதந்திரிகளுடனான கூட்டத்தைச் சொல்லலாம். இருவரும் தனித்தனியாக தூதுவர்களுடன் கூட்டங்களை நடத்தி தங்களுக்குள் இருக்கும் பிளவை சர்வதேசத்தின் முகத்துக்கு காட்டுகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளை சர்வதேச பயங்கரவாதமென்றும், இதனை வேரோடு ஒழிக்க வேண்டுமென்றும் குரல் கொடுப்பவர்கள் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு விடுதலைப் புலிகளை தங்கள் பக்கத்துக்கு அழைப்பதை அவதானிக்க முடிகிறது.

விடுதலைப் புலிகள் ஆயுதப் படையினரை இலக்கு வைத்தே தாக்குதலை நடத்தினார்கள், வெளிநாட்டினரை அவர்கள் ஒருபோதும் இலக்கு வைத்து தாக்குதல் நடத்தவில்லை, தலைநகரில் இதுபோன்ற பாரிய தாக்குதலை அவர்கள் நடத்தவில்லையென்று ரணில், மைத்திரி உட்பட பல அமைச்சர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

ஆனால், மகிந்த ராஜபக்ச தமது கருத்தை வேறுவிதமாகப் பகிர்ந்துள்ளார். விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் புலம்பெயர் தமிழரூடாக நிதி சேகரிப்பதை பாதிக்கும் என்பது கருதியே வெளிநாட்டினர் எவரையும் கொலை செய்யவில்லையென்று கொச்சைத்தனமாக கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இனத்தின் விடுதலைக்காகப் போராடினர். இவர்களின் போராட்டங்களை இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் போராட்டங்களுடன் ஒப்பிடுவது தவறு என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருப்பதை மகிந்தவின் கூற்றுக்குப் பதிலாகச் சொல்லலாம்.

இவ்விடத்தில், மைத்திரி - ரணில் கூட்டுத்தலைமையிலான அரசாங்கத்தை நோக்கி சில கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன:

முற்கூட்டியே கிடைத்த எச்சரிக்கை தகவல் தொடர்பாக புலனாய்வுத்துறை எடுத்த நடவடிக்கை என்ன? இதுபற்றி பாதுகாப்புச் சபைக்கு அறிவிக்கப்பட்டதா? சந்தேகத்துகிடமாகக் கைதான சிலரை விடுவிக்குமாறு அழுத்தம் கொடுத்த அரசியல்வாதி யார்? கடந்த பல மாதங்களாக பாதுகாப்புச் சபை கூட்டத்துக்கு பிரதமர் அழைக்கப்படாதது ஏன்? பொலிஸ்மா அதிபர் முற்கூட்டிக் கிடைத்த தகவலுக்கு என்ன நடவடிக்கை எடுத்தார்?

இறுதியில் முனைப்பான ஒரு கேள்வியுண்டு.

குண்டுத்தாக்குதல் பற்றி முற்கூட்டியே போதிய தகவல் கிடைத்திருந்தும் அதனைத் தடுக்க புலனாய்வுத்துறை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கும் அப்பால், உயிர்த்த ஞாயிறு திருநாள் வழிபாட்டுக்கு அரசியல்வாதிகள் எவரும் செல்லாதது ஏன் என்ற கேள்விக்கு யார் பதில் கூறுவர்? ●

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

## புதினம்

தவறாது தபாலில் பெற 25 பவுண்கள் PUTHINAM என்ற பெயருக்கு CHEQUE உங்கள் முகவரியைக் குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

PUTHINAM, 38, MOFFAT ROAD
LONDON SW17 7EZ


## 26வது புதிய தமிழ் ஒலைகள் - 2019

**வெளிவந்துவிட்டது!**
**தமிழ் விகாரி புத்தாண்டில் உங்கள் அபிமான ஏடு**

தமிழ் ஒலைகள் புலம்பெயர் தமிழ் மக்களின் வாழ்வாதார நலன்களில் அக்கறை கொண்ட தனித்துவமான ஏடாக தொடர்ந்து 26 ஆண்டுகள் சேவை அளிப்பதை யாவரும் அறிவர். எமது சமூகம் வர்த்தக, பொருளாதார, கல்வி, கலை, வளர்ச்சியில் இதர சமூகங்களுக்கு நிகராக வளர்ச்சி காண வேண்டுமென்ற நோக்கத்துடன் தமிழ் ஒலைகள் தொடர்ந்து தமது பணியை செய்வதிலும் தமிழ் வர்த்தகங்களை முதல் நிலைக்கு உயர்த்துவதிலும் குறிக்கோளாக இருக்கின்றது.

**புலம்பெயர் தமிழர்கள் வீடுகளில் இருக்கவேண்டிய வழிகாட்டி 'தமிழ் ஒலைகள்'. அனைத்து தமிழ் வர்த்தக நிறுவனங்கள், ஆலயங்கள், தமிழ் சமூக நிறுவனங்கள், இன்னும் பல தமிழ் பொது இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.**

Email: editor@tamilpages.com
Website: www.tamilpages.com


## விமலின் பக்கங்கள்

### நூல் வெளியீட்டு விழா - அழைப்பிதழ்

தமிழ்கூறு நல்லுலகத்திற்கு நன்கு அறிமுகமான மூத்த தமிழ் ஒலிபரப்பாளர் இலண்டன் வழக்கறிஞர் விமல் சொக்கநாதன் எழுதிய 'விமலின் பக்கங்கள்'' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு உங்களைப் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இடம்: நாரத கான சபா (மினி ஹால்)
டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை -18

நாள்: 22.06.2019 | சனிக்கிழமை மாலை 6 மணி

விழாத் தலைமை:- **கலாநிதி ரவீந்திரன்**
(Professor & Head, Department of Journalism and Communication University of Madras)

வரவேற்புரை:- வழக்கறிஞர் **ஹரிசங்கர் கிருஷ்ணசுவாமி**
(நாரத கான சபா)

சிறப்புரைகள்:-

**பேராசிரியர் சம்பத்குமார்**
(Professor Asian College of Journalism , Former Correspondent with BBC , Former Producer Doordarshan, Chennai )

**திரு.விஜய திருவேங்கடம்**
(Station Director, All India Radio, Chennai, Rtd.)

**கலாநிதி T. ஜெய் சக்திவேல்**
( Asst Professor, Dept. of Journalism and Communication)

சங்கீத சொற்பொழிவு:- **மாலினி & சிவஸ்ரீ**

நிகழ்ச்சி முன்னிலையாளர்:- **ரஞ்சனி ராஜ்மோகன்**
(ஸ்ரீலங்கா ரூபவாஹினி தொலைக்காட்சி - மூத்த ஒளி பரப்பாளர்)

விழா ஏற்பாட்டுக் குழு சார்பில்
S.பாலாஜி + 91 94443 10136

KEERIMALAI SIVAN TEMPLE TRUST UK
Presents

## Smt VISHAKA HARI

and Accompanists



MUSICAL DISCOURSE
On
HIGHGATE HILL MURUGAN TEMPLE HALL
200A ARCHWAY ROAD, LONDON N6 5BA
27th May 2019 (Public Holiday)
Time 5.00 pm Doors open 4.30pm


Entrance Donations
Front Rows £25.00 Rear Stall £15.00

For Further Information Contact
Dr S Navaratnam- 07956579239
Dr K Sivakumar -07788415927
Mr V R Ramanathan - 07956369557
Mr Siva Thamboo -07861393295

Accompanists



Jyotsna Srikanth - Violinist



Abhiram Sahathevan - Mridangam

## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Auspicious Days, Special Poojahs & Festivals - 2018

### MAY- 2019 நடைபெறும் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 02 | Thursday | Pirathosa Viratham | பிரதோச விரதம் |
| 04 | Saturday | Amaavaasai Virtham | அமாவாசை விரதம் |
| 05 | Sunday | Kaarthikai Viratham | கார்த்திகை விரதம் |
| 08 | Wednesday | Chathuthi Viratham | சதுர்த்தி விரதம் |
| 10 | Friday | Sasti Viratham | சஸ்டிவிரதம் |
| 14 | Tuesday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 16 | Thursday | Prathosa Viratham | பிரதோச விரதம் |
| 18 | Saturday | Full Moon | பூரணை |
| | | Vaikaasi Visagam | வைகாசி விசாகம் |
| 20 | Monday | வற்றாப்பளை அம்மன் பொங்கலை முன்னிட்டு காலை துர்க்கை | அம்மாள் பொங்கல், அபிசேகம், பூசை |
| 21 | Tuesday | Chankadakara Chathurthi Viratham | சங்கடகரசதுர்த்தி விரதம் |
| 24 | Friday | Sasti | சஸ்டி விரதம் |
| 26 | Sunday | Apara Astami | அபர பட்ச அட்டமி |
| 30 | Thursday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 31 | Friday | Pirathosa Viratham | பிரதோச விரதம் |



# விமலின் பக்கம்

பொள்ளாச்சியில் பருவப் பெண்களை வன்புணர்வு செய்து அவர்கள் அறியாமல் அவர்களை வீடியோ படம் பிடித்து அவர்களைப் பயமுறுத்திப் பல்லாயிரக் கணக்கான ரூபாக்களைக் கறந்த நால்வர் பற்றியும் அவர்களுக்குப் பக்கபலமாகச் செயற்பட்ட அரசியல்வாதிகள், காவல் துறை அதிகாரிகள் பற்றியும் கடந்த மாதம் 'புதினம்' இதழில் ஆராய்ந்திருந்தோம்.

மூன்று வாரங்களுக்கு முன்பு எந்தப் பத்திரிகையை எடுத்தாலும் எந்த தொலைக்காட்சியைப் பார்த்தாலும் அதில் பேசப்பட்ட - ஆராயப்பட்ட விஷயங்கள் பொள்ளாச்சி வன்புணர்வும் சம்பவ நேரத்து படப் பிடிப்பும்தான்.

குற்றவாளிகளுக்கு எந்தெந்த அரசியல்வாதிகளுடன் தொடர்பு இருந்திருக்கலாம் என்றும் எந்தெந்த அரசியல்வாதிகளின் இளைய தறுதலைகள் தறிகெட்டு ஓடித் திரிந்து வன்புணர்வையும் படப்பிடிப்பையும் தமது முழு நேரத் தொழிலாகச் செய்து வந்தார்கள் என்றும் இப்படியான செயல்கள் பற்றி சமூக ஆர்வலர்கள், மாதர் சங்க இயக்கங்கள், பெண் பத்திரிகையாளர்கள், மாணவியர் தலைவிகள் தமிழகத்தின் அனைத்து தொலைக்காட்சிகளிலும் சூடு பறக்கும் விவாதங்களை செய்தி ஊடகங்களில் நடத்தி வந்தார்கள்.

"அரபு நாடுகளில் வழங்கப்படும் தண்டனைகள் போல குற்றவாளிகளுக்கு 'அதை' வெட்டி விடுவதுதான் சரியான தண்டனை - அதுவரை இந்தக் குற்றவாளிகள் திருந்த மாட்டார்கள்!" என்று இளம் பெண்களே ஆக்ரோஷமாகக் குரல் எழுப்பியதைக் காண எனக்கு வியப்பாக இருந்தது.

இதெல்லாம் நடந்து கனல் கக்கப்பட்டது நாலு வாரங்களுக்கு முன்னர்! இன்று பொள்ளாச்சி வன்புணர்வுகள் நம்மைக் கடந்து போய்விட்டன. யாருமே இதைப் பற்றி பேசுவாரில்லை.

இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று இந்தியாவில் இது லோக் சபா தேர்தல் காலம்! தமிழ் நாடு உட்பட அனைத்து மாநிலங்களும் மத்திய அரசுக்கான பிரதமரைத் தெரிவு செய்யும் திருவிழாக் காலம்!

தமிழ்நாட்டில் ஒவ்வொரு வாக்காளப் 'பெருந்தகையும்' 'பெருந்தொகை' பணத்தை லஞ்சமாகக் கைநீட்டிப் பெற்று வாக்குச் சாவடிகளுக்குள் போய் லஞ்சம் வாங்கிய கறை படிந்த கைகளின் விரல் நுனியில் மை பூசி பெருமைப்பட்டு தொலைக்காட்சி கமெராக்களுக்கு முன் தமது கறை படிந்த விரலைக் காட்டும் காலம்.

பொள்ளாச்சி வன்புணர்வுச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டிருந்தவர்கள் இரத்தம் சூடேறிய இளசுகள் மட்டுமல்ல அவர்களுடன் ஏதோ சில காரணங்களுக்காக -அரணாக நின்று பாதுகாத்த அவர்களின் உயர் மட்ட உயர் பதவி பெற்றோரும் உயர் காவல் துறை அதிகாரிகளும்தான் என்பது எல்லோராலும் பேசி விவாதிக்கப்பட்ட விஷயம். ஆனால், ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் விசாரணைகள் நடத்தப்பட முடியவில்லை! அது தமிழ்நாட்டின் தலைவிதி.



பொள்ளாச்சி சந்தேக நபர்கள்

பொள்ளாச்சி சம்பவத்தையும் இதே போன்ற எங்கள் மண்ணின் புங்குடுதீவு வித்தியா வன்புணர்வு சம்பவத்தையும் கடந்த மாத புதினம் இதழில் நான் விபரிக்கும்போது பெண்களையும் குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டிய காவல் துறை அதிகாரிகள், கற்பழிப்பு காடையர்களுக்குத் துணை போனது பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

நிஜத்தில் நடந்த அந்தச் சம்பவங்களை ஒத்த நிழல் கதை ஒன்று ஜெயம் ரவி நடிப்பில் வெளியாகியிருக்கிறது. படத்தின் பெயர் 'அடங்கமறு'. படத்தைப் பார்த்து பிரமித்து விட்டேன்.



பூர்ணா



ஜெயம் ரவி



மீரா வாசுதேவன்

பெரிய செல்வந்தர்களிடம் லஞ்சம் வாங்கி விட்டு அவர்களின் புதல்வர்களது பஞ்சமா பாதகச் செயல்களைக் கண்டும் காணாமல் இருப்பது ஒரு ரக பொலிஸ்.

ஆனால், லஞ்சம் எதுவுமே வாங்காமல் பெரிய மனிதர்களின் பிள்ளைகளை வாலிபக் காடையர்களைப் பாதுகாத்து வருவது மிகமிக மோசமான அராஜகம் - பொலிஸ் அயோக்கியத்தனம்.

பெரிய மனிதர்கள் என்றால் மிக மிகப் பெரியவர்கள். ஒருவர் மாவட்ட கலெக்டர், மற்றவர் வர்த்தகப் பிரமுகர். இப்படி நாலு பெரியவர்களின் நாலு காடைப் பையன்கள் ஊரில் உள்ள பெண்களை வேட்டையாடி புணர்ச்சி செய்து படம் பிடிப்பது அவர்களின் பொழுதுபோக்கு.

பாதிக்கப்பட்ட பெண்கள் எவருமே முறைப்பாடு செய்வதில்லை - விஷம் குடித்து உயிர் துறக்கிறார்கள். மரண விசாரணைகள் அனைத்துமே கன்னிப் பெண்கள் 'தற்கொலை' என்றே முடிவடைகிறது - வழக்கு மூடப்படுகிறது.

அதற்கு காரணமானவன் அந்த நகரின் JCP காவல் துறை இணை கமிஷனர் சாரங்கன் (சம்பத் ராஜ்). இந்த ஊரில் ஒரு சின்ன வேலையில் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டராகச் சேருகிறார் ஜெயம் ரவி.

இத்தனை கன்னிப் பெண்களும் ஏன் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்று கிளற ஆரம்பிக்கிறார் ஜெயம் ரவி. ஜெயம் ரவியின் இந்த நடவடிக்கை அவரது மேலதிகாரிகளான இன்ஸ்பெக்டர் கோபியையும் இணை கமிஷனர் சம்பத் ராஜையும் கொதிப்படைய வைக்கிறது. ஒரு நாள் பணக்கார வாலிபர்களைக் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் அடைத்து வைக்கிறார் ஜெயம் ரவி.

கலெக்டர் மற்றும் உயர் அதிகாரிகள் ஆத்திரம் கொண்டு தமது மகன்களை மீட்கிறார்கள்.

ரவியை சஸ்பெண்ட் செய்யும்படி உத்தரவிடுகிறார் கமிஷனர். 'நாங்கள் யார் என்பது உனக்கு நாளைக்குப் புரிய வரும்' என்று ரவியை எச்சரித்து விட்டுப் போகிறார்கள் அந்த பணக்கார காடையர்கள்.



ஜெயம் ரவி – ராசிகண்ணா

அன்று இரவோடிரவாக இன்ஸ்பெக்டர் ரவி வீட்டில் அவரது தந்தை, தாய், அண்ணா மற்றும் இரட்டைக் குழந்தைகள் ரவுடிகளால் தாக்கப்படுகிறார்கள் - தீ மூட்டி எரிக்கப்படுகிறார்கள். தீ விபத்து என்று காவல் துறையினர் அறிவிக்கிறார்கள்.

தனது பதவியையும் குடும்பத்தையும் இழந்த ரவி, அந்தக் காடையர்களை எப்படித் தண்டிக்கிறார் - ரவி சம்பந்தப்படாமல் பெற்றோர் மூலமே காடையர்களின் உயிர் பறிக்கப்படுவது அற்புதமாகக் காண்பிக்கப்படுகிறது.

தான் சப்-இன்ஸ்பெக்டராக இருந்தாலும் ஐபிஎஸ் பரீட்சைக்குத் தயார் செய்து வரும் ஜெயம் ரவி, தனது தொழில்நுட்ப அறிவையும் தடயவியல் அறிவையும் முழுமையாகப் பயன்படுத்தி, தான் சம்பந்தப்படாமல் குற்றவாளிகளைத் தண்டிப்பது ஆங்கிலப் படம் பார்த்தது போல இருந்தது. படம் இயக்கம்:- கார்த்திக் தங்கவேல், இசையமைப்பு:- சாம்.

இங்கு பிரிட்டனில், பிரிட்டிஷ் பேரரசியாரின் வாழ்க்கை - அவரது பெரியப்பாவின் முடிதுறப்பு போன்ற வரலாற்று சம்பவங்கள் பல வருடங்களுக்குப் பிறகும் திரைப்படங்களாக வெளி வெளிவந்து மக்கள் கவனத்தை ஈர்க்கின்றன.

ஆனால், பொள்ளாச்சி சம்பவம் வெளியே தெரியவர முன்னரே கடந்த டிசம்பர் 18-ம் திகதி வெளியான 'அடங்கமறு' படத்தில் பொள்ளாச்சி குற்றச் சம்பவத்தின் சாயல்கள் இருந்தமை எனக்கு வியப்பூட்டியது.

தமிழக சினிமாவின் பல கதாசிரியர்களும் சில இயக்குநர்களும் மிகவும் திறமையான படைப்பாளிகள் என்றே நான் நினைக்கிறேன். ●

# Sky Wings Travel

*Your Travel Is Our Passion...*




9.7 out of 10 Rating on Trustpilot
Shows that We Value You!

Trustpilot

**SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT**

## WORLDWIDE SPECIALS

| | | | |
|---|---|---|---|
| COLOMBO | Fr £404 | MELBOURNE | Fr £632 |
| CHENNAI | Fr £381 | AUCKLAND | Fr £683 |
| DELHI | Fr £369 | NEW YORK | Fr £314 |
| KUALA LUMPUR | Fr £441 | SYDNEY | Fr £602 |
| SINGAPORE | Fr £447 | TORONTO | Fr £312 |

**119 Tooting High Street, London, SW17 0SY**

IATA

**0208 672 9111**

*Above fares are subject to availablity - T&Cs apply*

5766 ATOL PROTECTED





வேல் தர்மா

# அசிங்கங்களை அம்பலப்படுத்திய விக்கிலீக் அசாஞ்சேயை பழிதீர்க்கும் அமெரிக்கா!

கணினி நிரலாளரான (Computer Programmer) ஜூலியான் அசாஞ்சே 'விக்கிலீக்' என்னும் இணையத் தளத்தை மறைத்து வைக்கப்பட்டிருக்கும் தகவல்களை அம்பலப்படுத்தும் எண்ணத்துடன் இலாப நோக்கில்லாமல் ஆரம்பித்தார். விக்கிலீக் மூலம் அமெரிக்காவின் உலகெங்கும் உள்ள தூதுவராலயங்கள் படைத்தளங்களுக்கிடையிலான 2,50,000இற்கும் அதிகமான இரகசிய தகவல் பரிமாற்றங்களை அம்பலப்படுத்தியவர் ஜூலியன் அசாஞ்சே. இவர் அம்பலப்படுத்திய தகவல்கள் அமெரிக்காவையும் பல நாடுகளையும் சஞ்சலத்திற்கு உள்ளாக்கியது. ஈராக்கில் அமெரிக்கப்படைகள் செய்த அட்டூழியங்கள், குவாட்டனாமோ சித்திரவதைகள், அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலின் போது செய்யப்பட்ட மின்னஞ்சல்கள், ஷெல் எரிபொருள் நிறுவனம் நைஜீரிய அரசில் ஊடுருவியமை, சவுதி இளவரசரின் பாலியல் மற்றும் போதைப்பொருள் சாகசங்கள், சவுதி அரேபியா அல்கெய்தாவிற்கு நிதி உதவி செய்தமை, பல்வேறு நாடுகளின் ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரதிநிதிகள் தொடர்பான தகவல்களை அமெரிக்கா ஒற்றாடியமை, அமெரிக்கா, இரசியாவை மாபிய அரசு எனக் கருதியமை, ஈரானைத் தாக்கும் படி சவுதி மன்னர் அமெரிக்காவைத் தூண்டியமை எனப்பல தகவல்களை ஜூலியான் அசாஞ்சே அம்பலப்படுத்தினார். இவர் இல்லாவிடில் அமெரிக்கப் படையினரால் ஆப்கானிஸ்த்தானிலும் ஈராக்கிலும் உண்மையில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பதை உலகம் அறிந்திருக்காது, உலக அரசியலில் நடந்த பல சதிகள், அசிங்கங்கள், இனக்கொலைகளுக்கு மேற்கு நாடுகள் செய்த உதவிகள் அம்பலப்படுத்தப்பட்டிருக்காது.

### அசாஞ்சே வைத்த பொறி

கணினி நிபுணரான அசாஞ்சேயிற்கு இணையவெளியில் ஊடுருவி தகவல்களைத் திருடுவது இலகுவானதாக இருந்தது. அவருக்கு அமெரிக்கப் படையில் பணிபுரியும் செல்ஸி மன்னிங் என்பவரின் நட்புக் கிடைத்தது. அமெரிக்கப் படைத்துறையின் இரகசியங்களுக்கு எதிராக அசாஞ்சே வைத்த பொறிதான் செல்ஸி மன்னிங். ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறிய செல்ஸி மன்னிங் அமெரிக்கப் படையில் பணியாற்றியவர். இரகசியமானதும் வெளியில் விட்டால் அமெரிக்காவிற்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுமான அமெரிக்கப் படைத்துறை மற்றும் வெளியுறவுத்துறைக்கு சொந்தமான 7,50,000 தகவற்பரிமாற்றங்களை அவர் திருடுவதற்குத் தேவையான ஆலோசனைகளை ஜூனியான் அசாஞ்சே வழங்கினார்.

### தேன் பொறியில்(Honey Trap) விசித்திரமான கற்பழிப்பு வழக்கு

ஜூலியான் அசாஞ்சேயை கைது செய்வதற்கு அமெரிக்கா ஒரு பொறி வைத்ததாக நம்பப்படுகின்றது. அது இரு பெண்களை வைத்துச் செய்த தேன் பொறி. அதற்கு உகந்த நாடு விசித்திரமான கற்பழிப்புச் சட்டங்களைக் கொண்ட சுவீடன். சுவீடனில் ஜூலியான்அசாஞ்சே விக்கிலீக்கில் அமெரிக்க இரகசியங்களை வெளிவிடுவது குற்றம் ஆகாது. அதனால் அவர் அங்கிருந்து தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள சுவீடன் அரசிடம் விண்ணப்பித்திருந்தார். அவர் மீது கற்பழிப்பு வழக்கு ஒன்று சுவீடனில் பதியப்பட்டது. 2010 ஆகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் போரில் ஊடகங்களின் பங்கு தொடர்பாக ஸ்ரொக்ஹொமில் (Stockholm) நடந்த மாநாட்டில் உரையாற்ற ஜூலியான் அசாஞ்சே இரண்டு பெண்களைச் சந்திக்கின்றார். அவர்களின் சம்மதத்துடன் மேற்கொண்ட உடலுறவு அவருக்கு எமனானது. முதற் பெண்ணுடன் உறவு கொள்ளும் போது பாவித்த ஆணுறை கிழிந்து விட்டது. இரண்டாவது பெண் ஆணுறை அணியச் சொல்லியும் ஜூலியான்அசாஞ்சே ஆணுறை அணியாமல் அவர் தூங்கிக் கொண்டிருக்கும் போது உடலுறவு கொண்டாராம். இவை இரண்டும் சுவிடன் நாட்டுச் சட்டப்படி குற்றமாகுமாம். இந்த வழக்கிற்காக அப்போது இலண்டனில் இருந்த ஜூலியான் அசாஞ்சேயை சுவீடனுக்கு நாடு கடத்தும் வேண்டுகோள் 2010 ஓகஸ்ட் மாதம் விடுக்கப்பட்டது. பிரித்தானிய உச்ச நீதிமன்றம் 2012 மே மாதம் நாடு கடத்த உத்தரவிட்டவுடன் அவர் இலண்டனில் உள்ள எக்குவேடர் நாட்டு தூதுவரகத்தில் சரண் புகுந்து கொண்டார்.

### சட்டச் சிக்கல்

செல்ஸி மன்னிங்கிற்கு அமெரிக்கப் படைத்துறை நீதிமன்றம் தண்டனை வழங்கி சிறையில் அடைத்தது. இவர் அசாஞ்சேயிற்கு எதிராக சாட்சி சொல்ல மறுக்கின்றார். அதனால் அவர் காலவரையின்றி காவலில் வைக்கப்பட்டுள்ளார். அசாஞ்சே நேரடியாகத் திருடாதபடியால் அவர் மீது அமெரிக்கத் தகவல்களைத் திருடிய குற்றத்தை சுமத்த முடியாமல் அமெரிக்கா தடுமாறியது. கடைசியில் அமெரிக்க மக்களவை ஆய்வாளர்கள் ஒற்றாடல் சட்டத்தின் கீழ் ஜூலியான் அசாஞ்சேயை மாட்டக்கூடிய ஒரு சட்டப் பிரிவை கண்டு பிடித்தனர். ஆனால், ஒரு பிரசுரிப்பாளரை அந்தச் சட்டப்பிரிவுகளின் கீழ் இதற்கும் முன் நீதிமன்றில் நிறுத்தப்படவில்லை. இதனால் அமெரிக்க சட்டவாளர்கள் திணறி கண்டு பிடித்ததுதான் சுவீடன் தேன் பொறி.



அசாஞ்சே வைத்த பொறி

### கடவுட்சொல் உடைப்பு

செல்ஸி மன்னிங் அமெரிக்காவின் பெண்டகனின் கணினிகளை ஊடுருவுவதற்குத் தேவையான கடவுச்சொற்களை உடைப்பதற்கு ஜூலியான் அசாஞ்சே வழங்கினார் என்ற குற்றச்சாட்டை அமெரிக்கா அவருக்கு எதிராக குற்றம் சுமத்துகிறது (*conspiracy to commit computer intrusion*). செல்ஸி மன்னிங் அசாஞ்சேயிற்கு எதிரான வழக்கில் அமெரிக்க அரசுடன் ஒத்துழைக்க மறுத்து வருகின்றார். அதனால் நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றச்சாட்டு செல்ஸிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா அசாஞ்சேயிற்கு எதிராக தீவிர நடவடிக்கைகளை எடுக்க முயன்ற வேளையில் அமெரிக்கா செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பிய கியூரோசிட்டி ஆய்வு வாகனத்தை அசாஞ்சேயின் ஆதரவாளர்கள் இணைய ஊடுருவல் மூலம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றதாகச் செய்திகள் வெளிவந்தன. ஆனால், நாசா அதை முறியடித்து விட்டது எனவும் கூறப்பட்டது.

### ஹிலரியும் அசாஞ்சேயும்

2019 ஏப்ரல் 11-ம் திகதி இலண்டனில் கைது செய்யப்பட்ட ஜூலியான் அசாஞ்சே உடனடியாக பிரித்தானிய நீதிமன்றின் பிணை விதிகளை மீறிய குற்றச் சாட்டை எதிர் கொள்கின்றார். அடுத்தது சுவீடனில் விநோதமான கற்பழிப்பு வழக்கு. மூன்றாவது பெண்டகன் கணினிகளை ஊடுருவ செல்ஸி மன்னிங்கிற்கு உதவிய வழக்கு. மூன்றாம் வழக்கிற்கான ஆதாரம் இருவரும் இணையவெளியூடாகச் செய்த உரையாடல்கள். அசாஞ்சே மீது 2010-ம் ஆண்டு குற்றம் சுமத்தப்பட்ட போது அமெரிக்க வெளியுறவுத்துறைக்கு பொறுப்பான அமைச்சராக இருந்த ஹிலரி கிளிண்டன் அவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதில் தீவிரமாக இருந்தார். அவரைப் பழிவாங்க 2016-ம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் ஹிலரி போட்டியிட்ட போது அவரது மின்னஞ்சல்களைத் திருடி வெளியிட்டு அவரது தோல்விக்கு வழிவகுத்தார் அசாஞ்சே.

### ஆட்சி மாற்றமும் அசாஞ்சே மீது உளவியல் தாக்குதலும்

ஜூலியான் அசாஞ்சே இலண்டனில் உள்ள எக்குவேடர் தூதுவரகத்தில் சரணடைந்த போது எக்குவேடரில் ஆட்சியில் இருந்த ரஃபேல் கொரியா அசாஞ்சேயை வெளிப்படைத் தன்மைக்கான போராளியாகக் கருதினார். அமெரிக்காவிற்கு எதிரான அசாஞ்சேயின் நடவடிக்கைகளை விரும்பினார். அசாஞ்சேயிற்கு தேவையான வசதிகளை இலண்டன் தூதுவரகத்தில் செய்து கொடுத்தார். 2017-ம் ஆண்டு மே மாதம் எக்குவேடரில் ஆட்சிக்கு வந்தவர் லெனின் மொரினோ. இவர் அமெரிக்க ஆதரவாளராகக் கருதப்படுகின்றது. அதனால் அவர் அசாஞ்சேயை தான் முந்தைய ஆட்சியாளர்களிடமிருந்து பெற்ற பிரச்சனையாக விபரித்தார். அசாஞ்சேயை ஒரு இணையவெளித் திருடராகப் பார்த்தார். அவர் இலண்டன் தூதுவரகத்தில் பணியாற்றிய அனைவரையும் இடமாற்றம் செய்து அசாஞ்சேயிற்கு எதிராகச் செயற்படக் கூடியவர்களை பணியில் அமர்த்தினார். அசாஞ்சேயின் தொலைத்தொடர்பு இணையவெளித்தொடர்பு போன்றவற்றைத் துண்டித்ததுடன் அவரை யாரும் சந்திக்க முடியாது என்றார். தனிமைப் படுத்தப்பட்டு உளவியல் தாக்குதலுக்கு உள்ளான அசாஞ்சே சுவரில் மலம் வீசுதல் போன்ற விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டார். இறுதியில் அவரை தூதுவரகத்திற்குள் புகுந்து கைது செய்யும் அனுமதி பிரித்தானியக் காவற்துறைக்கு எக்குவேடரால் வழங்கப்பட்டது.



அமெரிக்கா வைத்த தேன் பொறிகளா?

### ஊடகத்துறைக்கு அச்சுறுத்தல்

அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா அசாஞ்சேயை ஒரு நீதிமன்றத்தில் தண்டிப்பது எதிர்காலத்தில் பல ஊடகவியலாளர்களை தண்டிக்கும் ஒரு முன்மாதிரியாக அமையும் என்ற கரிசனையுடன் இருந்தார். ஊடக சுதந்திரத்தை விரும்பும் பலரும் அதையே கருதுகின்றனர். அசாஞ்சேயும் தன்னை விக்கிலீக்ஸ் என்ற இணையவெளி ஊடகத்தை நடத்துபவராகக் கருதுகின்றார். அவரை பிரித்தானியாவில் இருந்து அமெரிக்காவிற்கு நாடு கடத்தக் கூடிய அளவிற்கு அவருக்கு எதிரான குற்றச்சாட்டு இருக்குமா என்பதும் ஒரு முக்கியமான கேள்வி. அசாஞ்சே சித்திரவதைக்கோ அல்லது இறப்புத் தண்டனைக்கோ உள்ளாகும் ஆபத்துள்ள எந்த ஒரு நாட்டுக்கும் அவரைக் கடத்த மாட்டோம் என்ற உறுதி மொழியுடன் எக்குவேடர் பிரித்தானியா அவரைக் கைது செய்ய அனுமதித்தது. 2018-ம் ஆண்டு பிரித்தானியர் ஒருவர் அமெரிக்காவின் *FBI* யின் கணினிகளை ஊடுருவியவரை அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்படுவதை பிரித்தானிய நீதிமன்றம் தடை செய்தது. ●

World Tour Store



# கனகதுர்க்கை ஆலயத்தில் இலக்கிய சங்கமம் நடாத்தும்

# 'செவாலியர் இளவாலை அமுது' நூல் வெளியீட்டுத் திருவிழா


புலம்பெயர் மண்ணில் வேர்விடத் தொடங்கிய எம்தமிழருக்கு தம் பலமாய், ஆணிவேராய், ஆத்மசுவாசக் காற்றாய் எம்மின அடையாளம் பேணும் எம் உயிர்ச்சத்தானவை இலக்கியங்களே!

நான் இம்மண்ணில் எனையூன்ற எத்தனிக்க முன்பாக அன்னைத்தமிழை அரவணைத்தே பயணித்தேன். என் திசையெல்லாம் அவளின் தீங்காற்றே தீண்டுகிறது.

என் உடலுழைப்பில் களைப்புற்ற போதெல்லாம் இலக்கிய இளைப்பாற்றலை தந்தகளம்-அருளாசி பொழியும் இலக்கியத் தடாகம் அன்னை கனகதுர்க்கை அம்மன் ஆலயம். ஆம், அமுதுப்புலவரின் நட்புக்குத் திசைகாட்டியவளும் அவளே.

எந்தத் திசையை நோக்கினாலும் எனக்குள் தணியாதிருப்பது இலக்கியத்தாகமே, என் தேடலுக்குக் கிடைத்த இலக்கியப் பெருந்தடாகம், ஒரு இலக்கிய ஊற்று தமிழ்க்கங்கை இளவாலை அமுது அவர்கள். அவருடன் நான் கலந்து உரையாடிய நாட்கள், பயணித்த நாட்கள், களம் கண்ட மேடைகள் எல்லாம் வெறும் கழிந்த நாட்கள் அல்ல, என்னைப் பட்டை தீட்டி ஒளிவிடச் செய்த படைப்புக் கலங்கள் அவை. இந்த நாட்டில் அமுதுப்புலவர் ஆற்றிய இலக்கியப்பணிகள் வரலாற்று முக்கியம் வாய்ந்தவை.

ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் உருவான இலண்டன் தமிழ் இலக்கிய மன்றம், இலக்கிய சங்கமம் மூலமாக உருவான இலக்கியக்களங்களுக்கெல்லாம் முன்னோடியாக முதன்மைத் தலைமையாக இருந்து




எமக்கு வழிகாட்டியவர் அமுதுப்புலவர் அவர்கள்.

அவருடைய இறுதி மூச்சு தமிழ் அன்னையின் பெருமூச்சு, அதை உள்வாங்கியவன் நான், அந்தத் தமிழ்க்கனத்தைத் தனியொருவனாகச் சுமந்து செவாலியர் இளவாலை அமுது என்ற நூலாகப் பிரசவித்திருக்கின்றேன்.

எங்களுடைய இலக்கியப் பயணங்களின் பாடுகள்; தடங்கள்; கைகோர்த்துப் பயணித்தவர்கள், தலைமீது கைவைத்து குருவாசி வழங்கியவர்கள், பொருள் தந்து, இடம் தந்து பேருதவி புரிந்த ஆலயங்கள் பல, அவற்றுள் சிலவற்றை நிழற்படங்களாக, செய்திகளாக இந்நூலில் பதிவாக்கியுள்ளேன்.



செவாலியர் இளவாலை அமுது அவர்களுடன் இலக்கிய சங்கமம் மற்றும் துறைசார்ந்த இலக்கியக் கலைஞர்கள் யாவரும் ஒரு கூட்டுப்பறவைகளாக கூடிக்குலாவியுள்ளோம். நீண்ட தூர இலக்கியப் பயணங்களை மேற்கொண்டு இலக்கிய விருந்துகள் பரிமாறி, அந்த இலக்கியவெளிக்குள்ளேயே எம்பரப்பை விரித்துக்கொண்டோம்.

எங்கெங்கிருந்து இலக்கியப் பேராளர்கள் இலண்டனுக்கு வந்தார்களோ அவர்களையெல்லாம் கைகூப்பி வரவேற்று அழைத்து, இலக்கிய சங்கமம், விருந்தளித்துக் கௌரவித்தது.

விருந்துகளுக்கெல்லாம் பிதாமகராக இருந்தவர் அமுதுப்புலவர் அவர்கள். அவற்றையெல்லாம் அமுதுப்புலவரின் வரலாறு சொல்லும் இந்நூலில் சொல்லியுள்ளேன்.

தன்னினம் காத்தல் தம்மொழி போற்றல் என்ற வாழ்வுக்கு அகராதியாய், நிறை வாழ்வு வாழ்ந்தவர் அமுதுப்புலவர் அவர்கள்.

எங்கள் அடையாளத்தின் பெருமைக்குரிய அமுதுப்புலவர் ஐயா அவர்களின் நூற்றாண்டுப் பெருவிழாவில் அவரின் தமிழ்ப்பணியைக் கௌரவிப்பதற்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ●

## அமுது புலவரின் நூற்றாண்டு விழாவில் நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி

**இலக்கிய சங்கமம் நிறுவனர் சிவதணிகாசலத்தின் எழுத்தில் அமுதுப்புலவரின் வாழ்க்கை வரலாறும், இலக்கியத்தின் இலக்கியத் தடங்களும் அடங்கிய 'செவாலியர் இளவாலை அமுது' நூல் வெளியீடு**

**02.06.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30-9.00** | **பல்தேச இலக்கியப் பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கும் இலக்கியத் திருவிழா**

**ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலயம், 5 Chapel Road, West Ealing, Middelsex, W13 9AE**

**தமிழோடு தமிழுக்காய் நூறாண்டு வாழ்ந்து தமிழான தமிழ்க்கங்கை மூதறிஞர் செவாலியர் அமுதுப்புலவரின் நூற்றாண்டு விழாக் காண வாரீர்.**

**விழா ஒருங்கமைப்பாளர்கள்:** ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்: திரு.எஸ்.அபயலிங்கம், திரு.எஸ்.கருணைலிங்கம், திரு.ரீ.யோகநாதன், திரு.எஸ்.சிறீரங்கன், திரு.அ.தேவசகாயம்

**ஈழபதீஸ்வரர் ஆலயம்:** திரு.க.விவேகானந்தன்

**உயர்வாசற்குன்று முருகன் ஆலயம்:** திரு.எம்.சிறிகாந்தா

**சைவமுன்னேற்ற சங்கம்:** திரு.வீ.ஆர்.இராமநாதன், திரு.ஆர்.இரவீந்தரமோகன், திரு.வீ.சீ.வாமானந்தன் இலக்கிய வாசகர் வட்டம்: நிறுவனர் திரு.திருமதி தர்மேந்திரன், அங்கத்தவர்கள்.

இலக்கிய சங்கமம் உறுப்பினர்கள், இலண்டன் தமிழ்ப்பாடசாலை பிரதிநிதிகள்,

**தொடர்புகட்கு**: சிவதணிகாசலம் (இலக்கிய சங்கமம்); 07958319563

தமிழ்க்கங்கை அரங்கம் (மாலை 3.00-4.00) அமுதுப்புலவரின் குடும்ப உறவினர்களின் கௌரவம்

கலாநிதி அமுது அரங்கம் (மாலை 4.00-4.30) அமுதத்தமிழ் இரத்தினமாலை

**அறிஞர்களின் வாழ்த்துரை-**

மதுரகவி அரங்கம் (மாலை 4.30-5.00) இளைஞர் இலக்கிய சங்கமத்தின் இசைவிருந்து

செவாலியர் அரங்கம் (மாலை 5.00-8.00) நூல் வெளியீடு, ஆய்வு, இளைஞர் கருத்துக்களம்

மூதறிஞர் அரங்கம் (மாலை 8.00-9.00) விருது வழங்கல் விருந்துபசாரம்



# கனவு

இளைஞர்களே! கனவு காணுங்கள் என்று அழைப்பு விடுத்தார் அறிவு மேதை முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம். அவர் குறிப்பிட்ட கனவு, தூங்கும்போது வருவது அல்ல, இளைஞர்களை தூங்கவிடாது செய்து, முன்னேற்றப் பாதையில் முன்னோக்கிச் செலுத்தும் இலட்சியக் கனவு. இலட்சியமில்லாத மனிதன் பூஜ்யமாவான். இலட்சியக் கனவே வீட்டையும், நாட்டையும் மேம்படுத்தும் தாரக மந்திரம். கனவுகளில் இலட்சிய கனவே தலைவனாகும்.



'கனவுகளே! காதல் கனவுகளே!' என்று கவிஞர்கள் காதலுக்குக் கனவுகள் மூலம் தூபமிடுகிறார்கள். இரவும் பகலும் காதல் கனவுகளில் திக்குமுக்காடும் இளைஞர்களும், யுவதிகளும் பரவசத்துடன் பாடித் திரிகின்றனர். கனவு கண்டு காதல் கடலில் கரை சேர்ந்தவர்கள் சிலர் மட்டுமே. மூழ்கிப்போனவர்கள் பல்லாயிரம். திரைப்பட நடிகைகளையும், கனவுக் கன்னிகளாக வர்ணிப்பதன் காரணம் ஒப்பனை (MAKE UP) கலைத்த பின், அவர்களின் தோற்றம் பொலிவிழந்து, அழகிழந்து காணப்படும் என்பதே அதன் அர்த்தம். கனவுகளில் மட்டுமே அழகானவர்கள் நடிகைகள்-நடிகர்கள். அவர்களின் சித்தரிப்பும், நடிப்புத்தான்-உண்மையல்ல. நாம் காணும் பெரும்பாலான கனவுகளும் உண்மையல்ல-கவலைப்படத் தேவையில்லை. *Dreams are not True. Do not worry.* பகல் கனவில் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் அனேகம். பகல் கனவில் மட்டுமே 'கனவுக் கோட்டைகள்' சாத்தியம். பகலில் காணும் கனவும் உண்மையல்ல, அதனூடே கட்டும் கோட்டையும் நிஜமல்ல, நொடியில் தகர்ந்துவிடும். பகலில் காணும் லட்சியக் கனவு உழைப்பை மூலதனமாக்கி, நம்மை வெற்றிப்படிகளில் ஏற்றிவிடும். ஆனால், போலியாக நாம் காணும் கற்பனையான பகல் கனவுகளோ, நம்மை சோம்பேறிகளாக்கி, நம் வாழ்க்கையை அதள பாதாளத்தில் விழுத்திவிடும். இலட்சியக் கனவையும், பகல் கனவையும் வேறுபடுத்தி அறியக்கூடிய நுண் அறிவு அவசியம்.


கனவு என்ற சொல் தூக்கத்தில் நாம் காணும் சொப்பனத்தையே குறிப்பிடும். தூக்கத்தில் திரைப்படம் போல் வரும் கனவுகள் நம்மை வேறோர் உலகத்துக்கு அழைத்துச் சென்றுவிடும். விதவிதமான காட்சிகள் மாறிக் கொண்டே இருக்கும். மகிழ்ச்சியில் நாம் திளைத்திருக்கலாம். சில நேரம் சோகமும் துன்பமும் ஆட்கொள்ளும். திகிலும் பயமும் (*Night Mares*) ஏற்படுத்தும். சுகமான கனவுகள் நித்திரையைக் குழப்பாது. திகில் கனவுகளோ (*Night Mares*) நமது நித்திரையைக் குழப்பி, திடுக்கிட்டு, கண் விழித்து, கடும் குளிரில் கூட வியர்த்து விறுவிறுத்து தண்ணீர் குடித்து தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்ட அனுபவம் நம்மில் பலருக்கும் கிடைத்திருக்கும். இரவில் காணும் கனவுகளுக்கும் நம் உடல் செயற்பாடு எதிர்வினை செய்யும் (*Body Functions Reacts to Dreams*). பகலில் நம்மைச் சுற்றி நடைபெறும் செயல்களும், சூழ்நிலைகளும் நம்முடைய உடல், மன ஆரோக்கியத்தில் ஆதிக்கம் செலுத்தி நம்மை வருத்தி நோயுறச் செய்வதுபோல் (*To Become Sick*) இரவில் தூக்கத்தில் உண்டாகும் கனவுகளும் நம் உடல் செயல்பாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். விருப்பமில்லாத கனவு கண்டு, தூங்கும்போது பல்லைக் கடித்து (*Grinding Teeth*) தசைகள் இறுக்கமடைந்து, (*Stiff Muscles*) படுத்திருப்பதால், காலையில் கண்விழிக்கும்போதே உடல் நோவுடன் (*Body Pain*) அடுத்த நாளைத் தொடங்க வேண்டிய நிலை உண்டாக்கும். கனவுகளால், இரத்த அழுத்த ஏற்றத்தாழ்வுகளும் (*Blood Pressure Changes*) நம் உடலில் உண்டாவது சாத்தியமே. அதற்கு சிகிச்சையும் தேவைதான்.



கனவுகள் குறித்த ஆராய்ச்சிகள் மனித சமுதாயத்திலும், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களிலும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. சமுதாயத்தில் அரசன் முதல் ஆண்டிவரை பலரும் தம் கனவுகளின் பலன்களை அறிய ஆர்வப்படுவது இயற்கை. அரசர்களின் கனவுகளுக்கு பலன்கூறி பரிசுகள் பெற்ற மந்திரிகளும், சோதிடர்களும் பற்றி வரலாறுகளில் வாசித்திருக்கிறோம். தற்கால நவீன உலகில்கூட கனவுக்குப் பலன்கூறும் 'சொப்பனச் சோதிடர்கள்' எங்கும் நிறைந்துள்ளார்கள். கனவு வராதிருக்க மந்திரித்துக் கயிறும் கட்டி விடுவார்கள். வராது போகுமா கனவு?

கனவுக் காட்சிகள் கறுப்பு, வெள்ளையா? ஈஸ்ற் மென்ற் கலரா? இதற்கும் எதற்கும் தொடர்பு? ஆய்வுகள் நடக்கின்றன. நீங்கள் கண்ட கனவுகளை நினைவுபடுத்திப் பாருங்கள். கலரா? கறுப்பு வெள்ளையா? எது தொடர்பாக கனவுக் காட்சிகள் வருகின்றன? பகலில் நடந்த நிகழ்ச்சிகளுக்கும், கனவில் வரும் காட்சிகளுக்கும் தொடர்பு உள்ளதா? உங்கள் வாழ்வில் இதுவரை நீங்கள் சந்தித்த மனிதர்கள் அல்லது சென்று நேரில் பார்த்த இடங்கள் மட்டுமே கனவுக் காட்சியாகின்றதா? கனவுகள் நினைவில் நிற்கின்றனவா? மறந்து போகின்றனவா? கடந்த காலங்களில் நீங்கள் உங்கள் கனவுகளைப் பொருட்படுத்தாமல் விட்டிருந்தாலும் இனிமேல் கவனித்துப் பார்த்தால் உங்களுக்கும் புரியும்.

கனவுக் காட்சிகளின் உண்மை நிலை என்னவென்றால், ஏராளமான காட்சிகள் 'எடிட்' செய்யப்படாமல் ஓடிக் கொண்டிருக்கும். இது ஒரு தொடர் செயல்பாடு. கண் விழித்தால் கனவுக்காட்சி மறைந்து விடும். சில நாட்களில் சின்னத்திரை சீரியல் போல் அடுத்தடுத்த இரவுகளிலும் தொடர்ந்து வரும். பல நேரங்களில் ஒரு 'எபிசோட்' மட்டுமே காணக் கிடைக்கும். தொடர்ச்சி என்ன? வாழ்நாள் முழுவதும் 'சஸ்பென்ஸ்'தான்! கனவில் சிங்கம் புலி நம்மைத் துரத்துவது போலவும், சில நேரங்களில் நாம் அவற்றை விரட்டிக் கொல்வது போலவும் நம்முடைய நடைமுறை வாழ்வில் நாம் நினைத்துக் கூடப் பார்க்காத காட்சிகள் எல்லாம் அரங்கேறும். சுப காரியக் காட்சிகளும் காணக் கிடைக்கும். மாண்டு போனவர்களும், உயிரோடு இருப்பவர்களும் - ஏன், வாழ்வில் இதுவரை கண்டேயிராதவர்களும் கனவில் நடமாடுவார்கள். இதன் அர்த்தம் என்ன? காட்சிகளின் காரணகர்த்தா யார்? நம் மனமே இதன் பின்னணியாகும். உடல் உறங்கினாலும், மனம் உறங்காது. பகலிலேயே சில நேரம் நாம் 'பிஸி'யாக இருந்தாலும், நம் மனம் வேறோர் உலகில் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் அனுபவம் எல்லோருக்கும் கிடைத்திருக்கும். இந்த மனமே இரவின் மடியில் நம் உடல் உறங்கி இளைப்பாறும் போது, உல்லாசமாகத் தடையின்றி சஞ்சாரம் செய்யும். அதுவே கனவுக் காட்சிகளாக மலரும்.



ஹோமியோபதி மருத்துவத்தில், கனவுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கனவுகளும் நம்முடைய நோய்களும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையவை. பகல் பொழுதில் நம்முடைய செயல்பாடுகளாலும், சிந்தனைகளாலும் உடல் ஆரோக்கியம் சீர்கெடுவதுபோல் இரவுப் பொழுதில் உண்டாகும் கனவுக் காட்சிகளும், உடல் ஆரோக்கிய சீர்குலைவை உண்டாக்கும். பல நேரங்களில், நோயின் தீவிரத்தன்மையை அதிகரிக்கவும் கனவுகள் காரணமாகும். கனவுக் காட்சிகளுக்கு ஏற்ப ஹோமியோபதி மருந்துகளும் மாறுபடும். அமைதியான மனம் அமையப் பெற்றால் கனவுகளின் ஆர்ப்பரிப்புக் குறையும். ஹோமியோபதி சிகிச்சையும் உயர்ந்த பலன் அளிக்கும்.



நினைவில் நிற்கும் கனவுகள் ஒரு சில. மறந்து போன கனவுகள் ஏராளம். இனி உங்கள் கனவுகளைக் கூர்ந்து அவதானியுங்கள். ஆராய்ந்து பாருங்கள். உட்கார்ந்து கனவு அனுபவங்களை ஹோமியோபதி மருத்துவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சிகிச்சை சிறப்புறும். ●

**மேலதிக ஆலோசனைகளுக்கு**

**020 8144 1553**

# மாதவிடாய் சீரமைப்பு சிகிச்சை

## MRT

## Menstrual Regulation Treatment



ஒழுங்கற்ற மாதவிடாய்
Irregular Menstruation





ஹார்மோன் குறைபாடுகள்
Hormone Defects




அதீத ரத்தப்போக்கு
Over Bleeding



கர்ப்பமாவதில் சிக்கல்
Infertility




PCOD
சினைப்பை நீர் கட்டி




பி.சி.ஓ.எஸ்.–ஆல் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்குத் தள்ளப்படுபவர்கள்

பி.சி.ஓ.எஸ். பாதிப்பு ஏற்பட்டதே தெரியாமல் வாழும் பெண்கள்

## சிறப்பு சிகிச்சைகள்

- உயர் இரத்த அழுத்தம் (B.P/Hyper Tension)
- கொலஸ்ட்ரால் (Cholesterol)
- சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
- மூட்டு வலி (Arthritis)
- தோல் வியாதிகள் (Skin Diseases)
- ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
- மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
- செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
- குழந்தையின்மை (Infertility)
- டயபட்டிஸ் (Diabetes)




உடல் எடை அதிகரித்தல்
Obesity



முகப்பரு
Pimples



தலைவலி
Headache



சரியான தூக்கமின்மை
Sleepless



முடிகொட்டுதல்
Hair Fall

உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை

# HOMOEO CARE

இலவச மருத்துவ ஆலோசனைக்கு
**0208 144 1553**

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

0044 7833341693 homoeocare www.homoeocare.com homoeocare@rediffmail.com



# ஸ்ரோன்லி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில்

4, Dell lane, Stoneleigh, Surrey KT17 2NE Tel: 020 8393 8047

# தேர்த்திருவிழா

## வாகனத்தரிப்பு ஒழுங்குகள்

ஸ்ரோன்லி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலின் 20வது ஆண்டுத் தேர்த்திருவிழா 19–05–2019 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. அத்தருணம் ஆலயத்தை சூழவுள்ள வீதிகளில் வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடாது என்ற உள்ளூராட்சி சபை அதிகாரிகளின் கண்டிப்பான வேண்டுதலின் பேரில், ஆலய நிர்வாகம் ஒழுங்கு செய்துள்ள இலவச வாகன தரிப்பிடங்கள் மட்டும் அன்று முழுநாளும் பாவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 2017ம் ஆண்டு தேர்த்திருவிழா முதல் இந்த ஒழுங்கு முறை கடைபிடிக்கப்படுகிறது.

05–05–2019 ஞாயிற்றுக்கிழமை அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் உற்சவம் 19ம் திகதி தேர்த்திருவிழா, 20ம் திகதி தீர்த்தோற்சவம், 21ம் திகதி 'பூங்காவனம்', 22ம் திகதி வைரவர் மடையுடன் திருவிழா நிறைவுறும்.

# Sri Raja Rajeswary Amman Temple, Stoneleigh

## PARKING RESTRICTIONS:

## Chariot Festival, SUNDAY 19th MAY

**Severe Parking Restrictions Will be imposed on all day.**

The Temple has hired out car parks for devotees with all day shuttle service too and from the car parks

| Nonsuch Primary School | Nonsuch High School |
|---|---|
| Chadacre Road | Ewell Road |
| Stoneleigh, Surrey | Sutton |
| KT17 2HQ | SM3 8AB |
| ALL DAY | ALL DAY |
| (5 minute walk) | (20 minute walk) |




The roads marked in RED MUST be kept clear at all times
NO PARKING IS ALLOWED.
Shuttles from Car Parks To and from temple all day

- Parking is also available at **Nonsuch Park** and **Cuddington Recreation Ground**.
- **Parking enforcement officers** will **tow cars away** which have been parked irresponsibly. Ensure **emergency vehicles** can safely pass through the road . Do not double park.
- Use **Public Transport (Stoneleigh Rail Station, 406 bus)** or car-share with friends and family.


பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்
THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K
200A, Archway Road, London N6 5BA
Correspondence:2-4 Bedford Road, E17 4PX
Mob:07500 348 132 & 07956 919 511
20th வது சைவ மாநாடு
SAIVA CONFERENCE
"கந்த புராணமும் வாழ்வியலும்"
பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் இவ்வருடம்
2019 மே 25ம், மே 26ம் திகதிகளில் நடத்தவிருக்கும் மாபெரும் சைவ மாநாட்டில்
கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.
Chief Guest
Sri Sivagnana Balaya Swamigal
Mailam Pommapura Atheenam
Special Guest
Sri satguru Bodhinatha Veylan Swami
Hon.Guest
Sri Ramasamy Sundara Rajan
Guest Speaker
Kambavaruthi Jeyaraj
Guest Speaker
Chanthiramouleesan Laleesan
Innisai Kacheri
Malavika Sundar
Free Entry
Designed & Printed @ JR Print Tel: 020 8503 6643
Saturday 25th May 2019 from 9.00 am - 9.00 pm
HIGHGATE HILL MURUGAN TEMPLE
200A, Archway Road, London N6 5BA
Sunday 26th May 2019 from 9.00 am - 9.00 pm
LONDON SIVAN KOVIL,
4A Clarendon Rise, London SE13 5ES.
Mr.M.Gopalakrishnan
Secretary
Mr.C.Canagasundaram
Chairman
Mr.K.V.Kaneshamoorthy
Treasurer

நா.முத்துநிலவன்

# இந்தியா இப்போது முன்னேறிவிட்டது!



அப்போதெல்லாம்
வண்டியில் பெட்ரோல் திருடினார்கள்,
இப்போது வண்டியையே திருடுகிறார்கள்!

அப்போதெல்லாம்
வங்கியில் கொள்ளை அடித்தார்கள்.
இப்போது வங்கியையே
கொள்ளை அடிக்கிறார்கள்!

அப்போதெல்லாம்
குழந்தைகளிடம் நகை திருடினார்கள்
இப்போது குழந்தைகளையே திருடுகிறார்கள்!

அப்போதெல்லாம்
தொலைக்காட்சியில் படங்களும்
செய்தியும் வந்ததோடு,
இடையிடையே விளம்பரங்களும் வந்தன
இப்போது விளம்பரங்களுக்காக
வரும் தொடர்களில்
செய்தியும் படமும் சிறிதளவு வருகிறது!

அப்போதெல்லாம்
மீனவர் மீன் பிடித்தார்கள்
இப்போது மீனவர்களையே
பிடித்துப் போகிறார்கள்!

அப்போதெல்லாம்
அம்மா அப்பா பாசத்தால் வளர்ந்தோம்
இப்போது மம்மிடாடி
பணத்தால் வளர்க்கிறார்கள்!

அப்போதெல்லாம்
பிள்ளைகள் வீட்டில் பெற்றோர் இருந்தார்கள்
இப்போது வெளிநாட்டில் பிள்ளைகள்
தொடர்பு எல்லக்கு அப்பால் இருக்கிறார்கள்!

அப்போதெல்லாம்
தண்ணியடித்தவர்கள்
பயந்தொதுங்கிப் போனார்கள்
இப்போது தண்ணியடிக்காதவரே
ஒதுங்கிப் போகிறார்கள்!

அப்போதெல்லாம்
விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தார்கள்,
இப்போது விவசாயத்தையே தள்ளுபடி செய்கிறார்கள்!

வங்கியில் சிறுகடன் வாங்கிய விவசாயி விஷம் குடிக்கிறான்
வங்கியை முழுங்கியவனோ வெளிநாட்டில் விஸ்கி குடிக்கிறான்!

கடவுள் இல்லை கடவுள் இல்லை
பெரியார் சொன்னது உண்மைதான்!
ஏழாயிரம் கோவில்களில் கடவுள் இல்லை!
பூசை வைத்த பூசாரிகள் சொல்லவில்லை
மீசை வைத்த அதிகாரிதான் கண்டு சொன்னார்!

போலிச்சிலைகளைப் பூசித்த மக்கள் இப்போது
யோசிக்கிறார்கள்., கடவுள் இல்லை?
போலிப்பூசாரி, போலிச் சிலை, போலிக் கடவுள், போலி மருத்துவர்
போலி அதிகாரி, போலிப் போலிசு, போலித்தலைவர்கள்,
போலி அமைச்சர், போலி அரசு, போலி மகாத்மா!

கொல்லப் பட்டவரை மகாத்மா என்றனர் பலர்
கொன்றவனையும் மகாத்மா என்பவரும் உளர்!

முன்பை விட இப்போது
இந்தியா இப்போது முன்னேறித்தான் விட்டது!!

# கண்ணீர் சிந்தும் அழகுச் சிலைகள்

இணுவை ச. சிறீரங்கன்
ஆலய அறங்காவற்சபைத் தொண்டன்

மூன்றாம் பிறை போன்ற சிரிப்பு. முத்துப்பற்கள். நெற்றியில் ஓர் சிறு வளைந்த திருநீற்றுக்குறி.என்றும், எப்போதும் தூய்மையான உடுப்புகள்.



"எப்பிடி அங்கிள்?" என்று குசலம் விசாரிக்கும் பாங்கு. நெஞ்சில் வஞ்சமில்லாத சிரிப்பு. அகத்தின் அழகு முகத்தில் பிரதிபலிப்பு.உரையாடலில் உலாவரும் உண்மை வார்த்தைகள். யாரையும் சினக்காத, எடுத்தெறிந்து பேசாத வார்த்தைகள்.

இத்தகைய அணிகலன்களை உள்ளடக்கிய, ‘உங்களுக்கு நயவஞ்சகமான உலகில் என்ன வேலை’ என எண்ணிய இறைவன் உங்களைத் தன்னுடன் அணைத்துக் கொண்டான் போலும்.

அதற்கான காரணம் எமக்குப் புரிகிறது. இலண்டன் கனகதுர்க்கை ஆலயத்தில் நீங்கள் வடித்த, அழகுச் சிற்பங்களும் இப்போது கண்ணீர் வடிக்கின்றன.

அந்தச் சிற்பங்களை எல்லாம் நீங்கள் உருவாக்கியபோது, அதில் ஒளிவீசிய அழகில் மனதைப் பறிகொடுத்த அம்பாள் உங்களைத் தன்னோடு அருகிருத்திக் கொண்டதில் தவறேயில்லை. ஆனால், தன்னுடன் நிரந்தரமாக்கிக் கொண்டதில் நாங்கள் எங்கோ தவறு செய்து விட்டோமோ தெரியாது.



உலகப் புகழ்பெற்ற ரவிவர்மாவின் ஓவியத்திலும், மகாபலிபுரச் சிற்பங்களிலும் இதயத்தைப் பறிகொடுத்த இறைவன் உங்கள் கைவண்ணங்களிலும் மயங்கியதில் தப்பேயில்லை.

உங்கள் ஏழுபிறப்புக்களில், ஒருமுறை நீங்கள் நிச்சயமாகச் சோழ மன்னனின் ஆயனச்சிற்பியாக இருந்திருப்பீர்கள் என்பதை உங்கள் சிற்பங்கள் பறைசாற்றுகின்றன.

அகம்பாவம், ஆணவம் என்பன தலைவிரித்தாடும் இந்த உலகில் "இதை நான் செய்தேன், நான் இல்லாவிட்டால் இது வந்திருக்குமா" என்று பிதற்றித்திரியும், ஆணவப்பித்தம் பிடித்தவர்கள் சிலர் இருக்கும் இவ்வுலகில், நீங்களும் இருந்திருக்கிறீர்கள். அவர்களை நீங்களும் கண்ணுற்றுள்ளீர்கள்.உங்கள் மனம் அப்பழுக்கற்றது. மிகவும் புனிதமானது. களங்கமற்றது. இதை ஆலயம் வரும் யாவரும் அறிவர்.

சென்ற கார்த்திகை மாதம் திருவாரூர் சென்றபோது, "அங்கிள் லலிதாசகஸ்ரநாமம் பாடி, அகத்தியர் வணங்கிய, திருமிச்சியூர் அம்பாளைத் தரிசித்து வாருங்கள்" என்று கூறி எங்களையும் தரிசிக்க வைத்த, அன்புத்தம்பி செந்திலை எங்கே காண்பது?

இந்த உலகுள்ளவரை உங்கள் சிற்பங்கள் அழியாது. நீங்களும் அடியார்களை விட்டகல மாட்டீர்கள். சீர்காழிச் செந்திலே, உங்கள் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உங்களைப்பிரிந்து வாழுகின்ற, வாடுகின்ற உறவுகளுக்குக்கும், அடியார்களுக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

**ஓம் நமசிவாய ! சாந்தி !**

கவிஞர் சிவசிவா அழகன்ராஜ்



# சங்கமமாகும்! ஐக்கியமாகும்!

என் மனது
உன் மனதில் சங்கமம்
உன் மனது
என் மனதில் ஐக்கியம்;

என் காதல்
உன்னிடத்தில் சங்கமம்
உன் காதல்
என்னிடத்தில் ஐக்கியம்;

காதலில் சமத்துவம்
காதல் இல்லையெனில்
சாதலில் சமரசம்;

வாழ்வினில்
சந்தோசம் சிலவிதம்
தாழ்வினில்
சங்கடம் பலவிதம்;

சந்தோசத்தில்
வாழ்பவர் ஒருவிதம்
சங்கடத்தில்
தாழ்பவர் மறுவிதம்;

வாழ்வுமின்றி தாழ்வுமின்றி
சந்தேகத்தில்
மாள்பவர் எவ்விதம்?

சலனம் காதலிடம்
சபலம் காமனிடம்
இவை இரண்டும்
இருப்பது மனிதரிடம்;

இவை இரண்டிலும்
பற்று இல்லையெனில்
மனிதமனம் புனிதமாகும்;



என் மனது
அப்போது.....
அப் புனிதரிடம் சங்கமமாகும்;

உன் மனது
அப்போது.....
அப் புனிதரிடம் ஐக்கியமாகும்.



வவுனியூர் இரா.உதயணன்

# இப்படியும்....

நேரம் இரவு எட்டு மணியைத் தாண்டியிருந்தது. வெளியே ஒரே குளிரும் பனிமூட்டமுமாக காணப்பட்டது.

கட்டிலில் புரண்டு படுத்திருந்த சினேகன் மெல்ல எழுந்து அமர்ந்தான். அவன் இந்த நாட்டிற்கு வந்து எட்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டது.

எடுப்பான அழகான தோற்றம் கொண்டவன்தான் சினேகன். இருபத்தைந்து வயதில் காதலித்து திருமணம் முடித்தவன். அவன் தாயகத்தைவிட்டுப் புறப்படும் போது ஒரு வயதில் ஆண் குழந்தையும் இருந்தது.

அவன் சுருதியை விரும்பியிருப்பது கேள்விப்பட்டு இருபக்கத்தாரும் எதிர்த்தனர். காதலிக்கும் போது ஏற்பட்ட எதிர்ப்புப் போராட்டம் திருமணம் வரை தொடர்ந்தது. அவனுக்கு நல்ல நண்பர்கள் இருந்தார்கள். நண்பர்களின் உதவியுடன்தான் திருமணமும் நடந்தேறியது.

இருவரும் பட்டதாரிகளாக இருந்தாலும் படித்து முடித்து வெளியே வந்தவுடன் எந்தவொரு வேலையும் கிடைக்கவில்லை.

வேலையில்லாமல் திருமணமும் முடித்துவிட்டால் வாழ்க்கை ஒரு போராட்டக்களமாக மாறிவிடும் என்ற உண்மையை அப்போதுதான் இருவரும் உணர்ந்தார்கள்.

சினேகனின் மிக நெருங்கிய நண்பர் சங்கரின் அலுவலகத்தில் பகுதிநேர முகாமைத்துவ உதவியாளராக பணிபுரிய ஆரம்பித்தான் சினேகன். அதனால் கிடைத்த வருமானம் சாப்பாட்டிற்கும் வீட்டு வாடகைக்குமே போதுமாக இருந்தது.

திருமணமாகி சரியாக ஒருவருடத்தில் ஆண்பிள்ளையும் பிறந்துவிட வாழ்க்கை என்ற பாதையில் சோதனைகள் அதிகமாகின. இருபக்கத்துப் பெற்றோர்களும் இருவரையும் பேரப்பிள்ளை பிறந்தும்கூட சேர்த்துக்கொள்ளவில்லை.

சோர்ந்துவிட்ட சினேகனை நண்பர்கள் உற்சாகப்படுத்தினார்கள். வெளிநாடு சென்றால் விரைவில் பணம் சம்பாதித்துவிடலாம் என்று அறிவுரை கூறினார்கள்.

ஆனால், சினேகனுக்கு சுருதியையும் கைக்குழந்தை ரூபனையும் விட்டுப்பிரிய மனமில்லாமல் தவித்தான்.

படித்ததற்கு ஏற்ற வேலை இன்னமும் கிடைக்காததால் வெளிநாடு சென்றே ஆகவேண்டும் என்ற நிலையில் நண்பர்களின் உதவியோடு லண்டன் வந்து சேர்ந்தான்.

அவனோடு பல்கலைக்கழகத்தில் படித்த ஒரு நண்பன் அழைத்துச் சென்று தான் வாடகைக்கு இருக்கும் வீட்டில் சினேகனையும் தங்க வைத்தான்.

சினேகனது நண்பன் மேற்படிப்பிற்காக இங்கு வந்தவன். சினேகனோ பணம் சம்பாதிக்கவேணும் என்ற நோக்கத்தில் எப்படியோ லண்டன் வந்து அகதி அந்தஸ்துப் பெற விண்ணப்பித்து இருந்தான். ஒரே வருடத்தில் அவனது அகதி அந்தஸ்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுவிட அவனுக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. எதிர்பார்ப்புக்கள் எல்லாம் ஏமாற்றங்களாகத் தொடங்கின. அவன் வேலை செய்ய முடியாது. திரும்பிப்போக வேண்டும் என்று கடிதமும் வந்திருந்தது.

அந்தநிலையில்தான் அவனுக்குக் கிடைத்த வெளிநாட்டு நண்பன் ஒருவன் அவனுக்கு தொலைபேசி இலக்கம் ஒன்றைக்கொடுத்து அவர்களுடன் பேசினால் உனது தோற்றத்திற்கும் அழகிற்கும் வேலை தருவார்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

சினேகனின் சோர்ந்திருந்த உள்ளத்தில் புதுத்தெம்பு வந்தது.

உடனேயே நண்பன் தந்த நம்பருக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டான். அடுத்த பக்கத்தில் ஒரு பெண் பதிலளித்தாள். அடுத்தநாளே இன்டர்வியூவிற்கு வருமாறு கூறினார்கள்.

சினேகனுக்கு எப்படியாவது கதைத்து வேலையை வாங்கிவிடவேணும் என்ற தவிப்பு.

இரவு முழுவதும் புரண்டு படுத்தான். நித்திரை வரவேயில்லை. விடிந்ததும் காலைக்கடன்களை முடித்து நண்பனிடம் இருந்த "சூட்டை" இரவல் வாங்கிப்போட்டுக்கொண்டு இன்டர்வியூவிற்குப் போனான்.

அங்கே ஒரு பெண்தான் இவனைப் பார்க்க வந்தாள்.

சினேகனை அவள் ஏற இறங்கப் பார்த்தாள்.

பின்பு ஒரு புன்சிரிப்போடு,

"நீ நல்ல கட்டுடல் கொண்ட ஆணழகன்" என்று ஆங்கிலத்தில் சொன்னாள்.

சினேகனுக்கு புரியவில்லை. வெளிநாட்டு நண்பனும் தொலைபேசி நம்பரைக்கொடுத்தானேயொழிய என்ன வேலை என்று சொல்லவில்லை.

"பணத்தை கையில் தரலாமா" அந்தப்பெண் மீண்டும் சினேகனைப் பார்த்துக் கேட்டாள்.

சினேகனுக்கோ உள்ளூர அளவில்லாத சந்தோசம். "வரி கழிக்காமல் கையில் பணமென்றால் யார்தான் வேண்டாம் என்று சொல்வார்கள்" சிரித்துக்கொண்டே சொன்னான்.

அந்தப் பெண்ணுக்கு அடிக்கடி தொலைபேசி வந்துகொண்டிருந்ததால் ஒரு தொலைபேசி நம்பரையும் விலாசத்தையும் கொடுத்து,

"இந்த அட்டிரசுக்குப் போங்கள். அங்கே உங்களுக்கு வேலை இருக்கு. பணமும் கையில் தருவினம். வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொன்னாள்.

சினேகனோ என்ன வேலை என்று கேட்கவில்லை.

இன்டர்வியூ பண்ணிய பெண் இவனுக்கு என்ன வேலை என்று நண்பன் சொல்லி அனுப்பியிருப்பான் என்று நினைத்துக்கொண்டாள்.

எப்படியோ இன்டர்வியூ பண்ணிய பெண் கொடுத்த விலாசத்தை கண்டுபிடித்து முன்வாசலில் போய் நின்று தொலைபேசியில் அழைத்தான்.

"கம் இன் கம் இன்" என்று முன் கதவைத் திறந்து வரவேற்றாள் அழகான நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்ணொருத்தி. உள்ளே காலை எடுத்து வைத்ததும் முகத்தில் முத்தமிட்டுவிட்டு மேலே போகுமாறு மாடிப் படிகளை காட்டினாள்.

சினேகனோ குழப்பமடைந்தவனாக மாடிப்படிகளில் ஏறிச்சென்று அறையின் முன் நின்றான்.

கதவைச் சாத்தி தாளிட்டுவிட்டு மேலே வந்து அந்தப்பெண் சினேகனைத் தழுவி இழுத்து அறைக்கதவை சாத்திக்கொண்டாள்.

ஒரு மணித்தியாளத்தின் பின்பு இருநூறு பவுண் பணத்தை கொடுத்து வெளியே அனுப்பினாள் அந்தப்பெண்.

இதன் பின்பு சினேகனின் வாழ்க்கை மாறிப்போனது. உடலை விற்று பிழைப்பை நடத்தத் தொடங்கினான் சினேகன்.

வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பமும் மாற்றமும் சினேகனுக்கு ஏற்பட்டது. தினமும் இரவும் பகலும் அவனுக்கு வேலைதான்.



தொலைபேசி இரவு பகலாக அடித்தபடியே இருக்கும். ஒரு நாளைக்கு நான்கு ஐந்து பெண்களுடன் உடல் உறவு வைக்கவேண்டிய அளவுக்கு பிசியாகிவிட்டான். தனிமையில் வாடும் பெண்கள், கணவன்மார் வேலைக்குப்போன பின்பு காமஇச்சையில் தவிக்கும் பெண்கள் இப்படிப் பல வகையான பெண்கள்.

சினேகனின் கைகளில் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் வரியில்லாத பணம் வந்து சேர்ந்தது. உடலை விற்று உடல் வியர்க்க உழைக்கும் பணத்தை சுருதிக்கு மாதாமாதம் அனுப்பி வைக்க அதில் ஒரு அழகான வீட்டை கட்டி முடித்தாள் சுருதி. அவளோ பாவம். உடலை விற்றுத்தான் சினேகன் பணத்தை அனுப்புகிறான் என்று அவளுக்கு எங்கே புரியப்போகிறது.

இங்கோ சினேகனுக்கு மணித்தியாலத்திற்கு ஒரு பெண் கட்டிப்பிடித்து முத்தம்கொடுத்து உடலுறவுகொள்ள.

அங்கோ சுருதி கணவனை நினைத்து ஏங்கும் பேதையாக.

கட்டிலில் அமர்ந்திருந்த சினேகனுக்கு உடல் அசதியாகவிருந்தது. அப்போது அவனது கைத்தொலைபேசி அடித்தது. இன்னொரு வேலைக்கு அதாவது சினேகனின் உடலை அனுபவிக்க ஒரு பெண் கைத்தொலைபேசியில் அழைத்துக்கொண்டிருந்தாள்.

இண்டையோட இதுக்கு ஒரு முடிவு கட்டவேணும். உழைக்க வேண்டியதுக்கு மேல உழைச்சாச்சு. இனி நாட்டுக்கு திரும்பிப் போய் சுருதியோடையும் மகனோடையும் வாழவேண்டியதுதான். நினைத்தவண்ணம் அந்தப் பெண்ணிடம் போவதற்கு உடையை மாற்றினான் சினேகன்.

காசுக்காக உடலை விற்கும் பெண்களை விபச்சாரிகள் என்று சொன்னால் இவனை எப்படிச் சொல்வது? விபச்சாரன் என்றா... சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஒரு தனிமனிதனை எப்படியெல்லாம் மாற்றுகிறது.

ஒன்றுமறியாத சுருதி சினேகனின் வரவுக்காக ஏக்கத்துடன் காத்திருக்கிறாள். ●

முற்றும்.





**டாக்டர். என்.ஜெகநாதன்**

# சொந்த பந்த(ய)ம்

சொந்தம் என்பதை உரிமைக்குரியது, உறவுக்குரியது என விளக்கம் கொள்ளலாம். பந்தம் என்பது இணைக்க / பிணைக்கப்பட்டிருப்பதை குறிப்பது, விரும்புவதற்கற்ற சொந்தமும் பந்தமும் எவரையும் திருப்திப்படுத்துவதற்கில்லை. விருப்பு, வெறுப்பு என்ற வேறுபாட்டை தவிர்ப்பதே திருப்திக்கான வழி. எதற்கும் சம்மதம் என்று ஆகிவிட்டால் சம்பந்தம் நிலைக்கும் தான்.

நண்பர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். விரும்பத்தகாதவர்கள் என ஆகிவிட்டால் நட்பு அவ்வளவுதான். உறவினர்கள் தெரிவுக்குரியவர்களாக அமைவார்கள் என்றில்லை. அவர்களை தள்ளி வைப்பதால் உறவு அற்றுவிடும் என்ற முடிவு ஒதுங்கிவிட்டவர்களின் மனவெண்ணம் மட்டுமே.

எந்த உறவையும் நிலைநாட்ட அதற்கான பாலம் அமைக்கப்பட வேண்டும். அது பலமுள்ளதாகவும் வேண்டும். பலமற்ற பாலம் இலகுவில் தளர்ந்துவிடும். உறவுப்பாலம் பலமாக அமைய அவசியமானவை எவை? அவரவரது மனம், ஆன்மா விதி என்பதா, அல்லது அதற்கும் மேலான ஏதோ ஒரு சக்தி / அதிர்வு (*VIBRATIONS*) வெளிப்பாடுகள் அவர்களைக் கவரவோ / எதிர்க்கவோ என அமைகின்றனவா? எது நம்பிக்கையாகவுள்ளதோ அதுவே யதார்த்தமானது எனப் பலரும் ஏற்கிறார்கள்.

*RELATIONSHIP GAME* என ஆங்கிலத்தில் சொல்வதை சொந்தம் ஒரு பந்தயமாக அமைகிறது எனலாம். பந்தயத்தில் நாம் பங்கு பெறுவது ஒரு கேளிக்கை என்றாலும் வெற்றி நோக்கம் அல்லாது அதில் ஊக்கம் காட்ட மாட்டோம். தோல்வி காண்பவர் எரிச்சலும், ஏமாற்றமும் அடைவது சகஜம். சொந்தமாகவுள்ள உறவினர் மீது உரிமை, அல்லது அவர்களை கட்டுப்படுத்தும் நோக்கம் சிலருக்கு உண்டு. அது இயலாமல் போனால் உறவை இழக்கவும் அவர்கள் தயாராவார்கள்.

சொந்தம் பந்தயமாவது மனம் புரியும் விளையாட்டே, வாழ்க்கைச்சூழலில் சாதி, அந்தஸ்து, கௌரவம் என்று பேதம் பார்ப்பதும், விடுவதும் மனதில் தங்கிவிடுகிறது. ஆணவமும் சேர்ந்துவிட்டால் தனக்கு நிகராக அல்லது தன்னிலும் மேன்மையுடன் எவரையும் காணப்பொறுக்காததாக மனம் ஆகிவிடுகிறது. இந்தப் பந்தயத்தில் சொந்தம் தோற்று (இழக்கப்பட்டு) விடலாம்.

நட்புறவு, காதல் என்ற தகுதி பெறத் தேவை என்னவென்ற கேள்விக்குப் பதில் அளிப்பது எளிதல்ல. இரு உள்ளங்கள் ஒன்றாயின, கருத்து ஒருமித்து விட்டார்கள், ஆன்மாவின் பொருத்தம் (*SOUL MATE*) எனவெல்லாம் விபரித்துக் கொண்டே போகலாம்.

> **’அன்பைக் காட்டு; ஆனால், கட்டுப்படாதே!**
> **இந்த வித உறவில் ஏமாற்றம் தவிர்க்கப்படலாம்’**

மனம் விட்டுப் பேச / பழகுவதற்கு எந்தவித தடை (*INHIBITION*)யுமின்றி அணுகுவதற்கான அன்பு உயர்ந்தது எனலாம். நட்பிலிருப்பதும் பண்பில் அமைவதும் மெய்யன்பு எனலாம். அதன் கருத்தை விதம்விதமாக அர்த்தம் கொள்வது வீண் வம்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

உறவுக்குத் தடையாக அமையக்கூடிய எதைப்பற்றியும் அறியாமல் பொருத்தமானவரை (*RIGHT MAN/ WOMAN*) தேடுவதில் அர்த்தமில்லை. அது மனக்கோட்டையாகிவிடுமே அன்றி நடைமுறைக்கு உதவாது.

மற்றவரது செயற்பாடு (*ACTION*) எமது கட்டுப்பாட்டுக்கில்லை. அவரது செய்கைக்குப் பதிலாக (*RE-ACTION*), எவ்வாறு செயற்படுகிறோம் என்பதே எமது கட்டுப்பாட்டுக்குள்ளது. அதற்கு நிதானம், முன்யோசனை இன்றியமையாதன. அதில் சாத்தியமாற்றவர்கள் அதற்கென முயற்சிக்க வேண்டும். தியானப்பயிற்சிகளும் இதற்கு உதவுவன.

மன்னிப்போம், மறப்போம் என்றவாறு மற்றவர்களுடன் பழகுவது உசிதமானது என்பார்கள். மற்றவரது தவறான செய்கையை நாம் மன்னித்து விடுவது பெருந்தன்மையே. ஆனால், அது மற்றவரை திருத்திவிடும் என்றோ, அல்லது எமது பண்பினை பறைசாற்றவோ என எண்ணம் கொள்ளல் ஆகாது.

மற்றவரது தவறுக்கான காரணம் அறியாமை என்றாகலாம்; நாம் தீர்ப்பளித்து விடுவதாக அது ஆகிவிடுகிறது. தனது அறியாமையை உணர்ந்த கணம் அது திருத்தப்பட்டு விடுவதாகிறது. அதுவரை தமது தவறை யாரும் ஒப்புக்கொள்வதில்லை. சுட்டிக்காட்டுபவர் மீது கோபம் கொண்டே விடுவார்கள்.

எந்த உறவும் ஆரம்பத்தில் இனிமையானதே. பின்னர் அது கசந்து விடக்கூடிய காரணம், மனதில் நிகழும் பந்தயத்திற்கு பந்தம் பலியாவதுதான். ‘ஆம், அதுவே சரி’ என யாவரது போக்கையும் ஆமோதித்து விடுவதும், அல்லது ‘சும்மா இரு’ந்துவிடுவதும் உறவுகளை நீடித்து விடும் வழிகள் ஆகலாம்.

கூடுவதற்கும், குதூகலத்திற்குமாக மட்டுமே உறவுகள் என ஏற்பதற்கில்லை. ஆதரவு, அறிவுக்கும் உதவியாக அமைய வேண்டும். பிரமாண்டமான, பிரமிக்கத்தக்கதான பாலங்களினது அமைப்பில் புயலின் தாக்கத்திற்கு அது வளைந்து கொடுக்கத்தக்கதாகவும் நிர்மாணிப்பார்கள். உறவும் பாலமும் வாழ்வின் சுமைகளுக்கு வளைந்து கொடுக்கத்தக்கதாகவிருப்பதே சிறப்பானது. உசிதமான கணிப்பும் கடும் முயற்சியும் இன்றி இந்த இருவித பாலங்களும் செவ்வனே அமைய முடியாதன.

போட்டி போடலாம், அது பொறாமைக்கு வழிவிடக்கூடாது. இது விளையாட்டுப் போட்டிகளில் என்று மட்டுமல்ல, சொந்தங்களாகி விடுபவர்கள் வாழ்வில் பந்தயங்களாக நிகழ்வதை உள்ளடக்க வேண்டும்.

உறவுகள் பெரும்பாலும் நிலைத்துவிடுவது, ஒருவருக்கொருவர் ஆதாயமாக (*MUTUAL BENEFIT*) அமையவே. இது பொருள் சம்பந்தமானது என்று மட்டுமல்லாது மனவுணர்ச்சிக் (*EMOTIONAL NEED*) கானதுமாகிறது. இதை ‘விதி’யினது ரூபம் எனலாம். அதை விடுத்து அவரவர் ஊழ்வினைக்குரியது அல்லது ஆன்மாவின் பொருத்தம் என்பது ஒரு நம்பிக்கையே.

வெவ்வேறு விலங்கினங்களுக்கிடையிலாக ஆதாயத்திற்கான கூட்டுறவு அமைவதை *SYMBIOSIS* என ஆங்கிலத்தில் கூறுவார்கள். தனது திறந்த வாய்க்குள் நுழைந்து பற்களுக்கிடையே தேங்கிய உணவை அருந்தி சுத்தம் செய்ய, சில பறவை இனங்களை முதலை வரவேற்கிறது. இவ்விதமான உறவின் அன்பு / மனவுணர்ச்சி என்று சொல்லக்கூடிய அம்சத்தை அவை கொண்டிருக்க வாய்ப்பில்லை.

மனித இனம் இந்த அன்புக்காகவென உறவு தேடும்போது பிரச்சனைக்குள்ளாகிறது. ‘அன்பைக் காட்டு, ஆனால் கட்டுப்படாதே’ என ஆங்கிலத்தில் *EMBRACE LOVE NOT BOND* சுலபமாக சொல்லிவிடலாம். இந்தவிதமாக உறவுகொள்வதில் ஏமாற்றம் தவிர்க்கப்படலாம் என்பது உண்மையே.

மற்றவரது அன்பின் விசுவாசத்தில் ஓரளவு சந்தேகம் கொள்வதால் இந்த விதமாக உறவுக்கு முன்வருகிறார்கள் என்று கூறலாம். அன்பைப் பேணுவதற்கு தேவையானவை எவையென அவர்கள் உணரத்தவறுகிறார்கள் எனலாம்.

அன்பைப்பேண பொறுமை, விட்டுக்கொடுக்கும்/ மன்னிக்கும் மனப்பான்மை அவசியம். எமது கணக்கிலுள்ள எமது காமம்; சொர்க்கத்தில் திருமணம் நிச்சயிக்கப்படுகிறதா என அங்கலாய்ப்பதில் பயன் என்ன? அவரவர் மனவாற்றலிலுள்ள நிறைவும், குறைவுமே இதற்கான மூலகாரணம் எனலாம்.

தாய்க்கும் சேய்க்குமிடையிலான பந்தம் மேன்மையானதும் நிகரற்றதுமாகும். சகலவிலங்கு வர்க்கத்திலும் இது அமைவதை இயற்கை இயல்பு என்று குறித்தாலும் அதை இயக்குவதற்கான உட்சுரப்பு (*HORMONE*) பெண்ணினத்தில் உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

பெற்ற / இளம் குழந்தையை கைவிடும் தாய்களும் உள்ளனரே. சமூக சூழல் நிலை காரணமாக இது நிகழ்ந்தாலும் தாயின் மனநிலை பாதிக்கப்பட்டதாக அல்லது பாதித்துவிடக் கூடியதாக இச்சந்தர்ப்பங்கள் அமைகின்றன. இத்தகைய பந்தம் மனித உயிரின் ஆரம்ப காலத்தில் செழிப்பாக அமையாது போனால் பிற்காலத்தில் மனவளம் குறைபாடுடையதாக ஆவதை ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன.

சகோதரர்களுக்கிடையிலான போட்டி (*SIBLING RIVALRY*) இளம்பிராயத்தில் அமையலாம். அது வாழ்வில் தொடர்வது அவர்கள் மனம் பக்குவமடையவில்லை என்றாகிறது. ஆன்மீக முதிர்ச்சி இப்பக்குவத்தை எடுத்துக்காட்டுவதே.

*BLOOD IS THICKER THAN WATER* என்பது இரத்தபாசம் பற்றியதோ பந்தமாக அமைவது சொந்தத்தின் மேன்மைக்கு ஒரு சவால்தான்! ●



ப.வை. ஜெயபாலன்





# வல்வை இந்திர விழா

## காணக் கண்கோடி வேண்டும்!

“இந்திர விழா” காலங்காலமாக தொடரும் கோலாகல விழா. இளங்கோ அடிகள் எழுதிய சிலப்பதிகாரத்திலும் இது பிரசித்தம். புகார் நகர் பூம்புகார் என பெயர் பெற வைத்த விழா. சித்திரை தோறும் இத்தரைக்கு இரவு பொழுதில் பெரின் எழில் போர்க்கும் பௌர்ணமி நாள் இதன் மகுடம். செம்பியன் என்ற மன்னனும் கற்பக தோட்டம் என்ற கடலோர விழாவாக வழிவழி தொடர்ந்தான் என்கிறது வரலாறு. தீவினை அகற்றி நல்லன நல்க இறைவனை குளிர்விக்கும் விழா என்கிறது - சாத்தனார் என்ற புலவரின் பாடல் ஒன்று. காமன் கூத்து என்றும் இதற்கு ஒரு நாமம்.

வல்வை முத்துமாரி அம்பாளின் அருள் ஒளிவீசும் தவத்தின் தீர்த்தத் திருவிழா. இம்முறையும் இந்திர விழாவாக ஜொலித்துள்ளது. பொன் ஒளி உமிழும் வெண் நிலவில் வெண்மணல் படர்கிறது. கடற்கரையில் நீலக்கடல். அலைகள் ஆர்ப்பரிக்க, வழமை போல், பழமை போல் நடந்தேறியுள்ளது. இடையில் அரச போர்ப்படையால் உடைந்து சிதறிய ஊரா என வியக்கும் வண்ணம் மீண்டும் மிடுக்கோடு அழகு கோலோச்சுகிறது.

மதவடி, ஊரணியில் இருந்து ஊரிக்காடு வரை பிரதான வீதி முழுவதும் அலங்கார சோடனைகள், ஆங்காங்கே வர்ண மின் ஒளி அலங்கார மேடைகள், இரவு இரவாக மேடைகளில் இசை நடன கலை நிகழ்வுகள், ஒளி உமிழும் அலங்கார வளைவுகள் வேம்படி பகுதியில் இவை என்றால், வல்வை சந்தியிலும் இந்திர லோகம். சிவனும், அனுமனுமாக ஆளுயர உருவ பதாகைகள், பச்சை இலைகளும், பல வர்ண பூக்களும் சோடிகளாக இணைந்த ஜோடனைகள். கீழ்நோக்கி ஒளி மின் அசைவுகள் ஓடோடி ஒளிரும் நெடுக்கு மீன் கொடிகள் கொண்ட நீள வேலிகள் - மணல் தரையில் வட்டச் சுற்றில் சனம் கண்கொட்டாமல் பார்த்து ரசிக்க தீவட்டி கம்பங்களை சுழற்றி ஆடும் விளையாட்டுகள். கூடாட வடிவ பெரு வளைவு கொண்டு அமைக்கப்பட்ட மேடைகளில் இரவு இரவாக இன்னிசைக்கான பிரவாகம். ஆவடி, சிதம்பரா மைதானம் என்னும் அரங்குகள் நிகழ்வுகள்.

ஊரின் சீர் நார் நாராக கிழிக்கப்பட்டது. போர்க்காலம். ஊரின் வேர் நீர் தாங்கி நின்றது. மீண்டும் நிமிர்ந்தது என்பதற்கு கட்டியம் கூறியது, இந்த எழிற்கோலம். தெப்பத் திருவிழாவுக்கு அம்மனுக்கு கடலுக்குள் அலங்கார அரங்கு. மினுங்கும் வர்ண ஒளிகள், பளபளக்கும் பவளங்களாக ஜொலிக்க நீல, நீள கடல் அழகின் பிழிவு வடிய அம்பாளின் அருள் முகம் அதில் தகதகத்த பெருமிதம், வெல்லும் கை என்றும் வல்வை என்று அம்பாளும் ஆமோதிப்பதைக் காட்டியது.

இதன் பின்னணியில் முன்னைய காலங்களில் இதே வல்வை மண்ணில் தொடர்ந்து நடந்த உதயசூரியன் விளையாட்டுக் கழகத் தொடர் வருடாந்தர விழா நினைவில் வந்தது. பட்டம்





விடும் போட்டி, படகோட்டப் போட்டி, நாடகப் போட்டி என்று வருடாந்தரம் தொடர்ந்து அலைமோதும் மக்கள் அணி, கடலோரம் நிறைய நடந்த தொடர் விழாக்கள் அவை. அப்பப்பா! பட்டங்கள் ஆள் உயர அளவுக்கு இருக்குமா? அவை ஆகாயத்திற்கு அழகூட்டி, அசைந்தாடி இப்படி பறக்குமா? என்று முதன்முதலில் யாழ்ப்பாணத்தை வியந்து புருவம் விரிய வைத்த போட்டிகள் அவை. நாடகப் போட்டிகளில் தெல்லிப்பழையில் இருந்து சென்று நாங்களும் கலந்துகொள்வோம். அரை இறுதிப் போட்டியில் தெளிவான முத்தான நாடகங்களே அரங்கேறும். இவ்வாறு மின் அழகு வர்ணம் மெழுகிய கடல் ஓரம் திறந்தவெளி அரங்கில் பல்லாயிரம் ரசிகர்கள் முன்னிலையில் அரங்கேறிய பரவசம் இன்றும் மறக்க முடியாததுதான்.

அந்த நாள் முதல் இந்த இந்திர விழா வரை வல்வை மண்ணில் புகழை மனித மனங்களில் மகிழ்வோடு மீட்கும் இன்னொரு சிறப்பு வாணவேடிக்கை. இம்முறை இந்திர விழாவுக்கு விசேடம் தந்ததில் 60 அடி உயரத்துக்கு ஆகாயத்தில் வெடி வெடித்து விரிந்து அழகொளிரும் ஆகாய குடையோ என அதிசயிக்க வைத்த அவுட்டு வானங்களும்தான். இவை முப்பது ஏவப்பட்டதும் இந்திர விழாவின் இன்னொரு சிறப்பு. அன்றைய உதயசூரியன் விளையாட்டு விழா முதலாக வாண வேடிக்கைச் சிறப்பும், வல்வை விழாக்களில் நிலைப்பு.

இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய உற்சவமும் சித்திரா பௌர்ணமியை தீர்த்தத் திதியாக கொண்டுதான் ஆரம்பமாகின்றன. வல்வை மாரி அம்பாள் நினைவை மனதில் ஊறவைத்து இங்கு இந்த விழாக்களில் நித்தம் பக்தி பொங்க நிற்கும் பக்தர்களில் வல்வை மக்கள் தொகை உச்சம். இம்முறை ஈஸ்டர் விடுமுறை காலம். இந்த உற்சவ காலத்துடன் ஒன்றி வந்தது. இருந்து குறைடனில் நிலையான சொந்த நில தலமாக நிமிர்ந்து நிற்கும் இத்தலத்தில் இம்முறை உற்சவத்தில் வல்வை மக்கள் பெருமளவில் காணாமல் போனார்கள். அவர்கள் எங்கே என்றால் ஊரில் அங்கே என்ற பதிவே வெளியானது. அந்த அளவுக்கு வீரியம் பீறும் பூரிப்பை வல்வை மக்களுக்கு மாரி அம்பாள் தன்னை தரிசிப்போர்க்கு வாரி வழங்குகிறாள் என்பதே இதன் அர்த்தம். இந்திர விழா போன்று நித்தம் பக்தியுடன் இசை, நடனம், பிற வீர, தீர காலைகள் தொடரும் என்பதை உறுதிப்படுத்த மாரி அம்பாள் மீது ஊர் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே போதும்.

அகில உலக நாடுகள் அனைத்தையுமே ஈழத் தமிழன் பக்கம் திருப்பி பார்க்க வைத்த மறப்போராட்டக் கால தலைவர்களை தந்ததும் இந்த மண்தான். அறப்போராட்டத் துறைக்கு இரத்தினமான தலைவர்களைத் தந்ததும் இந்த மண்தான். அறப்போராட்டக் காலத்தில் ஆண்டாண்டாக எதிரும் புதிருமாக இருந்த



பெரும் தமிழ்க் கட்சிகளை, கூட்டணியாக்கி ஐக்கியப்படுத்திய “ஞானப்பா” பிறந்ததும் இந்த மண்ணில்தான். எள்ளுப் பாகுக்குள் ஊறி தேறி நின்று உடலுக்குச் சக்தியை ஊட்டும் சக்திதான் இந்த மண்ணில் நின்றாடும் மாரி அம்பாள் என்கிறது மனம்.

புலவர் வைத்தியலிங்கம் வல்வை மண் யாழ்ப்பாண இலக்கிய வரலாற்றுக்குப் பெற்றுத்தந்த தொடக்கம். அன்னபூரணி என்ற வல்வை கப்பல் அட்லாந்திக் கடல் வரை பயணித்து கப்பல் ஓட்டிய தமிழன் என்ற பெருமையை இப்பதிக்குத் தந்தது. பாக்கு நீரிணையின் தடி மைல்களையும் நீந்திக் கடக்க முடியும் என்ற சாதனையை நிலைநாட்டி 70 ஆண்டுகள் முன்பே சாதனைப் படைத்த நவரத்தினசாமி தொடர்ந்த ஆழிக்குமரன் ஆனந்தன் இந்த மண்ணின் வித்துக்களே. தொடக்கம் முதல் முடக்கம் காணாதது வல்வை மண்ணின் வரலாற்றுத் தொடர். ●

# இரா.உதயணன் இலக்கிய விருது எழுத்தாளர்களை கௌரவித்த பெருவிழா



தாம் ஒரு படைப்பிலக்கியவாதியாக இருந்து கொண்டு, ஏனைய எழுத்தாளர்களைக் கௌரவிக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டவராகச் செயல்பட்டு வருகிறார் என்று லண்டனில் வாழும் பிரபல எழுத்தாளர் வவுனியூர் இரா.உதயணனது பெருந்தன்மையைப் பெருமைப்படுத்தினார் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பீடாதிபதி, பேராசிரியர் வ.மகேஸ்வரன்.

லண்டன் தமிழிலக்கிய நிறுவகமும், இலங்கை தமிழிலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கும் இரா. உதயணன் இலக்கிய விருது 2018 வழங்கல், எழுத்தாளர் தம்பு சிவாவின் பவள விழா மலர் வெளியீடு, 'தாயக ஒலி' சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் (40வது) வெளியீடும் ஆகிய நிகழ்வுகள் பேராசிரியர் மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றன.





கொழும்பு தமிழ்ச்சங்கத்தில், பெருந்திரளான மக்கள் மத்தியில் சமீபத்தில் இவ்விழா நடந்தது.



படைப்பாளிகளை விருது வழங்கிக் கௌரவிப்பதில் பல அமைப்புகள் ஈடுபட்டு வந்தாலும், அத்தகைய முன்னெடுப்புகள் எத்தகைய நோக்குடன் செயல்படுகின்றன? என்ற கேள்வியுடன் தமது உரையை மகேஸ்வரன் ஆரம்பித்தார்.

"உண்மையில் தகுதியான ஆக்கங்களை, தகுதியான நடுவர்களின் விதந்துரைப்பின் அடிப்படையிலேயே கடந்த மூன்று வருடங்களாகத் தொடர்ச்சியாக இந்த இரு இலக்கிய நிறுவகங்களும் தெரிவு செய்து விருதுகளை வழங்கி வருவது ஆரோக்கியமான செயற்பாடாகும்" என்று அவர் கூறினார்.

விழாவின் முதன்மை விருந்தினரான, சாகித்யரத்னா பேராசிரியர் சபா.ஜெயராசா உரை நிகழ்த்தினார். "எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் மகிழ்ச்சியடைய வைப்பது என்பது உளவியல் ரீதியில் அவர்களை உற்சாகப்படுத்தும். மொழிசார்ந்த எழுத்து, அவனுடைய அறிவுடனான சொல்லாடல்கள், புதிய சொற்களை வெளிக்கொண்டுவர அவனுக்குத் தூண்டுகோலாக இருக்கும். அந்த வகையில் தமிழ் மொழியில் புதிய சொற்களின் உருவாக்கம் தவிர்க்க முடியாததொன்றாக அமைந்து விடுகின்றது. ஆகவே தமிழில் புதிய சொல்லாக்கங்கள் உருவாக்கப்பட்டு அவை பாவனையில் வளர்ச்சி பெறும் போதுதான் மொழியின் தனித்துவம் புதிய பிரமாணம் கொள்ளும். இன்றைய இந்தப் பெறுமதிமிக்க நிகழ்ச்சியை முன்னின்று நடத்தும் வவுனியூர் இரா. உதயணனுக்கும், தம்பு சிவாவுக்கும் ஏனையோருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" .



பேராசிரியர் வ.மகேஸ்வரன், தம்பு சிவாவின் பவள விழா மலரின் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். மலரின் சிறப்புகளை எடுத்துரைத்தார். குடும்பப் படங்கள் உட்படப் பலரின் படங்களும் மலரில் இடம்பிடித்துள்ளன. இடதுசாரிப் போக்கை கொண்ட தம்பு சிவா இளம் வயதிலிருந்தே மார்க்சியக் கருத்துக்களுடனான ஊடாட்டத்துடன் ஒன்றித்து வாழ்பவர். ஐம்பது வருட கால இலக்கியப் பயணத்தில் தடம்பதித்து தொடர்ந்து எழுதி வரும் அகவை எழுபத்தைந்தில் பவள விழா காணும் தம்பு சிவா தொடர்ந்தும் இலக்கியப் பணியை மேற்கொண்டு, நீண்ட காலம் வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன்" என்றார்.



அதனைத் தொடர்ந்து விருது வழங்கும் விழா பேராசிரியர் சபா.ஜெயராசா, பேராசிரியர் வ.மகேஸ்வரன். வவுனியூர் இரா.உதயணன் ஆகியோரின் முன்னிலையில் முக்கியமானவர்கள் புடை சூழ ஆரம்பமாகியது.

உயர் இலக்கிய விருதினை அருணா செல்லத்துரை தமது பல்வகைப்பட்ட இலக்கிய, ஆய்வுப் பணிகளுக்காகப் பெற்றுக்கொண்டார். சிறந்த ஊடகவியலாளர் விருதினை பெ.மாணிக்கவாசகமும், இன நல்லுறவு இலக்கிய விருதினை உபாலி லலீரத்னவும் பெற்றுக் கொண்டனர். திருவாளர்கள் செ.குணரத்தினம், செ.அந்தினிஜீவா, க.துரைசிங்கம், கலைஞர் கலைச்செல்வன் ஆகிய நால்வருக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப் பெற்றன. படைப்பிலக்கியங்களுக்கான விருதுகள் பின்வருவோருக்குத் திறமையின் அடிப்படையில் வழங்கி வைக்கப் பெற்றது. "யாவரும் கேளீர்" நாவலுக்கான விருது சிவ ஆரூரன் சார்பில் அவர் தந்தையார் பெற்றுக்கொண்டார். "அமேசன் காட்டில் அழகன் பூசாரி" என்றும் சிறுகதைத் தொகுதிக்கு கலைக்கோட்டன் அ.இருதயநாதனும், "சிறுவர் கதைகள்" என்னும் நூலுக்கு சிறுவர் இலக்கியத்துக்கான விருதினை முத்து இராதாகிருஷ்ணனும் பெற்றுக் கொண்டனர். காவியத்துக்கான விசேட விருதினை செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணனின் "விளைச்சல்" காவியம் பெற்றுக்கொண்டது. "தமிழ் வளர்ச்சி இலக்கிய விருது" எனச் செல்வராசாவின் "நூல் தேட்டம்" நூலுக்கு வழங்கப்பட்டது. அயலகப் படைப்பிலக்கியத்திற்கான விருதினை இருவர் பெற்றுக் கொண்டுள்ளார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த அண்டனூர் சுராவின் "முத்தன் பள்ளம்" என்னும் நாவலும் இலண்டனைச் சேர்ந்த கலாநிதி சந்திரசேகரம் பரமலிங்கத்தின் "இலங்கையில் தமிழர் இறைமை" என்னும் கட்டுரைத் தொகுதியும் விருதுகளைப் பெற்றுக்கொண்டன. "தாயக ஒலி" சஞ்சிகையின் சிறப்பு வாசகர் விருது திருமிகு.க.சரவணமுத்துவுக்கு வழங்கப்பெற்றது.



ஏற்புரையை "தாயகஒலி"யின் பிரதம ஆசிரியரும் பவளவிழா நாயகனுமாகிய தம்பு சிவா வழங்கினார். அவரது ஏற்புரையைத் தொடர்ந்து, இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆகியவற்றின் நிறுவனரும் தலைவரும், விழா ஏற்பாட்டாளருமாகிய வவுனியூர் இரா.உதயணன் நன்றியுரையை வழங்கினார்.

சிறப்பு நிகழ்ச்சியாக, திருமதி பவானி குகப்பிரியாவின் தியாகராஜர் கலைக்கோயில் மாணவிகள் வழங்கிய பரதநாட்டிய நிகழ்ச்சி சபையோரின் கரகோஷங்களின் மத்தியில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. நிகழ்ச்சித் தொகுப்பை யாழ். பல்கலைக்கழக மாணவி செல்வி அபிராமி மாணிக்கவாசகர் அற்புதமாக தொகுத்து வழங்கினார். நிறைவாக விழாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் இராப்போசன விருது வழங்கிச் சிறப்புச் செய்தனர், விழா ஏற்பாட்டாளர்கள். ●







டாக்டர் ஸ்ரீதரன்

# பம்மாத்து



இலண்டனில் கடந்த இருபது வருடங்களாக வாழும் கணக்காளர் பார்த்திபனிடம் பட்டம்-பதவி-பணம்-வீடு-வாகனம்-வசதிகள்-எல்லாமே தேவைக்கதிகமாக இருந்தும்-அவருக்கு வாழ்க்கையில் ஒரு பெரும் குறை.

தனது நண்பர்களின்-சுற்றத்தவர்களின் கவனம் தன் பக்கம் திரும்பும்படி தான் இதுவரை இலண்டனில் எதுவும் செய்யவில்லையே என்பதே அந்தக் குறை. அவரது நெருங்கிய நண்பர்கள் எல்லோருமே ஏதேதோவெல்லாம் செய்கிறார்கள். குடத்தினுள் எரியும் விளக்கு போலல்லாது அவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு விடயத்தில் மிகவும் பிரபலமாக இருக்கிறார்கள். எந்த விதத்தில் அவர்களுக்கு நான் குறைந்து போனேன்?

எதை எதையெல்லாமோ நினைத்து- எப்படி எப்படியெல்லாமோ முயற்சி செய்து களைத்துவிட்ட பார்த்திபனுக்கு கடைசியாக தோன்றிய யோசனை:

பத்து வயதுடைய என் மூத்த மகள் காவேரிக்கு வயலின் கற்பித்து இலண்டனே கலங்கும்படி ஒரு மாபெரும் அரங்கேற்றம் செய்ய வேண்டும்.

அரங்கேற்றம் செய்வதற்கு எட்டு வருடங்கள் தேவை என்றார் வயலின் ஆசிரியை. கணக்காளருக்கு அது புரியவில்லை. இருப்பதோ ஏழு ஸ்வரங்கள்! அதற்கு எதற்கு எட்டு வருடங்கள்?

யாருக்கு புரியும் அவருடைய அவசரம்?

எட்டு ஐந்தாகியது- நீண்ட பேரத்தின் பின்னர்!

அரங்கேற்ற திகதி நியமித்த பின்பு வகுப்புகள் ஆரம்பமாயின!

பாவம்-பலிக் கடா காவேரி! வாழ்க்கையில் அவள் அதிகமாக வெறுத்த விடயம் இந்த வயலின் வகுப்புகள்!

நிர்ப்பந்தங்கள்-நிபந்தனைகள்-சலுகைகள்-பரிசுகள்- காவேரிக்கு வேறு வழியில்லை. பாவம்! பத்து வயது சிறுமி அவள்.

மிக மிக விமரிசையாக நடைபெற்ற வயலின் அரங்கேற்றத்தின் போது - இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த ஒரு பிரமுகர் பேசினார்:

புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் கர்நாடக இசைக்கு கொடுக்கும் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் பார்த்து நான் மெய் சிலிர்த்துப் போகிறேன்.

இலங்கை சபையோர்களின் கரகோஷம் வானை பிளக்கிறது.

அரோகரா!



# பிரயாணிகள்

கடந்த பத்து வருடங்களாக இலண்டனில் வசிக்கும் தமிழ்க்கலைகளின் பாதுகாவலர்-தமிழ்க்கலாச்சாரத்தின் தந்தை- உயர்திரு மகாலிங்கத்தின் வீட்டிற்கு அவரின் தூரத்து உறவினர் ஒருவர் ஒரு குறுகிய விடுமுறையைக் கழிப்பதற்காக தற்காலிகமாக இலங்கையிலிருந்து வந்திருக்கிறார்.

ஒரு நாள் ஏதேதோ பொருட்களை எல்லாம் கடையிலிருந்து வாங்கி வந்த உறவினருக்கு மகாலிங்கம் கூறுகிறார்:

தயவு செய்து நான் சொல்வதற்காக கோவிக்க வேண்டாம். மிகவும் அவசியம் என்று பட்டால் ஒழிய தேவையற்ற சாமான்கள் அநாவசியமாக வாங்கிச் சேர்க்க வேண்டாம்.

இலண்டனில் நீங்கள் ஒரு சில மாதங்கள் மட்டுமே தங்கப் போகிறீர்கள்- நிரந்தரமாகவல்ல. நீங்கள் போகும்போது கூட முப்பது கிலோவிற்கு மேல் விமானத்தில் கொண்டு போக முடியாது. பணத்தைச் செலவழித்து பொருட்களை வாங்கிச் சேர்த்த பின் அவற்றை இங்கு விட்டு விட்டுப் போவதில் எந்தவித அர்த்தமுமில்லை.

மகாலிங்கம் கூறுவதை கவனமாக கேட்ட அவரது செல்லப்பிராணியான காம்போதி என்னும் நாய் உரத்த குரலில் வாய் விட்டுச் சிரித்தது.

அந்தச் சிரிப்பின் காரணம் புரியாது அதற்கு விளக்கம் கேட்டது அவரது செல்லப்பிராணியான கல்யாணி என்னும் பூனை.

காம்போதி சிரித்துக்கொண்டே கூறியது:

இப்படிப்பட்ட முட்டாள்த்தனமான பேச்சை என் வாழ்க்கையில் நான் கேட்டதேயில்லை. உறவினரின் தற்காலிக விஜயத்தைப்பற்றி பேசும் இவரே இந்தப் பூமிக்கு ஒரு தற்காலிக விஜயம்! இவர் மட்டும் என்ன இங்கு நிரந்தரமாகவா தங்கப்போகிறார்?

விமானத்தில் சரி முப்பது கிலோ அனுமதிக்கிறார்கள். ஆனால், இவர் பூமியை விட்டு போகும் போது இவர் கட்டிய கோவணத்தைக் கூட இவரால் கொண்டு போக முடியாது. ஊருக்கு உபதேசம் செய்யும் இவர் எதற்காக இலண்டனில் இரண்டு வீடுகள் வைத்திருக்கிறார்? எதற்காக இவரின் வீடு நிறைய இவ்வளவு பொருட்கள்?

இங்கிலாந்தில் வசிப்பதற்கு இவருக்கு நிரந்தர வதிவிட உரிமை கொடுத்தவுடன் எதற்காக அதை நண்பர்களுடன் கொண்டாடினார்? நிரந்தர வதிவிடம் என்ன இந்தப் பூமியில் வாழ்வதற்கா இவருக்கு கொடுத்தார்கள், அதை கொண்டாடுவதற்கு? எதற்காக இந்த வயதிலும் பணத்திற்கு ஆசைப்பட்டு ஏதேதோ குறளி வித்தைகள் காட்டித் திரிகிறார்?

நமக்கு இருக்கும் அறிவு கூட இந்த மனிதர்களுக்கு இல்லை. பிறந்ததிலிருந்து இறக்கும்வரை பேய்கள் போல அலைந்து எதை எதையெல்லாமோ சேர்க்கிறார்கள்-போகும் போது கோவணத்திற்குள் மறைத்து கொண்டு போகலாம் என்பது போல!



# சமூகவியல்

முன்னொரு காலத்தில்
காட்டில் - எந்தவிதக்
கட்டுப்பாடுகளுமின்றி -
நிர்வாணமாக திரிந்து - உண்டு
உறங்கி இனத்தைப் பெருக்கி
-தன் இச்சைப்படி வாழ்ந்து வந்த
மனித இனம் - காலப் போக்கில்
மனைவி - திருமணம் -
வீடு குடும்பம் சமூகம் -
கலாச்சாரம்- இப்படி எத்தனை
எத்தனையோ கட்டுப்பாடுகளை
தங்களுக்குள் உருவாக்கி
இன்று இருக்கும் நாகரீக
நிலையை அடைந்திருக்கிறது.

இது நான் சிறுவனாக இருந்த
போது இந்த நூற்றாண்டில்
நான் படித்த சமூகவியல்!

இதைப் படித்த போது
நான் நினைத்தேன்:

ஓ! மனித
இனம்தான் எவ்வளவு
காட்டுமிராண்டித்தனமாக
வாழ்ந்திருக்கிறது!

முன்னொரு காலத்தில்
-எத்தனை எத்தனையோ
கட்டுப்பாடுகளை தங்களுக்குத்
தாங்களே உருவாக்கிய மனித
இனம் திருமணம் என்னும் ஒரு
வழக்கத்தையும் உருவாக்கி
இருந்தது. அரசாங்கங்களினால்
உருவாக்கப்பட்ட திருமணச்
சட்டம் இவனுக்கு
அவளென்றும்- அவளுக்கு
இவனென்றும் பிரகடனம்
செய்து - அவர்களுக்கு
கணவன் மனைவி என்ற
பெயரை வழங்கியது. அதன்
பின் - கணவனும் மனைவியும்
பிடித்ததோ - பிடிக்கவில்லையோ
- ஒருவரை ஒருவர் பிரியாமல்
ஆயுள் முழுவதும் சேர்ந்தே
வாழ்ந்தார்கள். அவர்கள் பெற்ற
பிள்ளைக்கு பெயர் வைத்து-
அதன் அப்பா யார் - அம்மா
யார் - என்று அரசாங்கத்திற்கு
பிரகடனம் செய்தார்கள்.
அவர்கள் பெற்ற பிள்ளையை
அவர்களே வளர்த்தார்கள்.
இதற்காக அவர்கள்
கஷ்டப்பட்டு உழைத்தார்கள்.
பணம் சம்பாதித்தார்கள்.

இது யாரோ - ஏதோ ஒரு
நூற்றாண்டில் - படிக்கப்
போகும் சமூகவியல்.

அப்பொழுது அவர்கள்
நினைப்பார்கள்:

ஓ! மனித இனம்
தான் எவ்வளவு
காட்டுமிராண்டித்தனமாக
வாழ்ந்திருக்கிறது!



# பிரித்தானிய தலை நகரில் மக்கள் மௌன அஞ்சலி!

மத்திய லண்டனில் அமைந்திருக்கும் தேவாலய வளாகத்தில் (St.Paul’s cathedral) பிரித்தானிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் 26.4.2019 மாலை மெழுகுவர்த்தி அஞ்சலி ஆராதனை 6 மணி தொடக்கம் 8 மணிவரை இடம்பெற்றது. இந் நிகழ்வை பிரித்தானிய தமிழர் பேரவையின் அரசியல் பரிந்துரைப்பு இணைப்பாளர் (Political Advocacy Coordinator) செந்தில்குமார் மௌன அஞ்சலியுடன் தொடக்கி வைத்தார். இதில் கலந்து கொண்ட பல்லின, மத மக்களும் ஏனைய அமைப்புகளின் பிரதிநிதிகளும் இலங்கை தீவில் ஈஸ்ரர் ஞாயிறு தினத்தில் பயங்கரவாத தாக்குதலில் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு மலரஞ்சலியுடன் மெழுகுவர்த்தி ஆராதனை செலுத்தினர். குறிப்பாக இந் நிகழ்வுக்கு Romford baptist church ஐ சேர்ந்த Ade Ogunleya (Deacon of Romford Baptist church) மற்றும் பாதர் எல்மோ ஜெயராசா ஆகியோரின் பிரார்த்தனைகள் இடம்பெற்றன. குறிப்பாக குறுகிய கால அறிவித்தலில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகள் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். இறுதியாக பிரித்தானிய தமிழர் பேரவையின் மனித உரிமை உதவி இணைப்பாளர் (Human Rights Coordinator) சாமினியின் இரங்கல் உரையுடன் நிகழ்வு நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.

# ஈலிங் கனகதுர்க்கையில் ஆத்மசாந்தி விசேட பூஜை

உயிர்த்தெழும் ஞாயிறு தினத்தில் எமது தாயகத்தில் கொல்லப்பட்டோருக்கான ஆத்மசாந்திப் பூசையும், விசேட வழிபாடும் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் 23.04.2019 அன்று நடைபெற்றன. இந்த விஷேட பூசையில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர், நகர சபைக் கவுன்சிலர்கள், பக்தர்கள் எனப் பலர் பங்கெடுத்தனர்.


நிர்வாக சபைத் தலைவர் சொ.கருணைலிங்கம் அவசிய, அவசரமாக இந்த பூசையை ஒழுங்குசெய்திருந்தார். இதில் கலந்து சிறப்பித்த ஈலிங்-கவுத்தோல் எம்.பி. விரேந்திர.சர்மா உரையாற்றுகையில், “இலங்கையில் கொல்லப்பட்ட சகல நாட்டு மக்களுக்காக இங்கு கூடியுள்ள நாங்கள், இன, மத, மொழி வேறுபாடின்றி ஒழுங்கிணைந்து, எதிராகக் குரல் எழுப்புகிறோம்” என்று குறிப்பிட்டார்.

ஈலிங் நகரசபை உறுப்பினர்கள் முகமட், முனிர் அகமட் ஆகியோரும்



படுகொலைகளைக் கண்டித்து உரையாற்றினார்கள். நிர்வாகசபைத் தலைவர் சொ.கருணைலிங்கம், அறங்காவலர் சபைத்தலைவர் அ.தேவசகாயம், சட்டத்தரணி இரத்தினசிங்கம் ஆகியோரும் படுகொலைக் கண்டித்து உரையாற்றினர்.

## உயிரிழந்தோருக்கு ஆத்மசாந்தி பூஜை



**இலங்கையில் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தோருக்காக ஆத்மசாந்திப் பூஜை, வரும் 6ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு லண்டன் MITCHAM (45C, CRUSOE ROAD, MITCHAM CR4 3LJ) தமிழினி செய்தி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. எழுத்தாளர் வவுனியூர் இரா. உதயணன், ‘தமிழினி’ குலேந்திரன், வசந்தி தயாளன் ஆகியோர் கண்ணீர் அஞ்சலி செலுத்துவர்.**

**இலங்கை அரசின் கவனக்குறைவினால் நடந்த அசம்பாவிதங்களை கண்டித்து, குடிவரவு ஆலோசகரும், தமிழினி ஆசிரியருமான குலேந்திரன், ஐ.நா. சபையில் முறைப்பாடு செய்துள்ளார்.**



# வாசகர் கடிதம்

### விமலின் பக்கம் அதிர வைத்த பதிவு

‘புதினம்’ இதழில் காணப்படும் கட்டுரைகள் யாவும் சமகாலச் சம்பவங்களை மிக ஆழமாக ஆராய்கின்றன. ‘விமலின் பக்கம்’ - அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும், அதிர வைத்த பதிவு. ஏற்கெனவே இந்தச் செய்திகளை இணையத்தில் வாசித்துக் கலங்கிப் போயிருந்தாலும், விறுவிறுப்பாக மீண்டும் ஆராயப்பட்டிருக்கும் இவ்விடயம் பல கேள்விகளை எழுப்புகிறது. வரவர பாலியல் குற்றங்களும் கொலைகளும் அதிகரிக்கின்றனவே ஒழிய, தண்டனைக்குப் பயந்தாவது குறைவதாகத் தெரியவில்லையே!

வக்கிர மனம் கொண்ட கொலைகாரராக மாறுவதற்கு என்ன காரணம்? சமுதாயம் ஏன் இப்படித் திடீரென மாறிவிட்டது? மக்கள் ஏன் இரக்கமற்றவர்களாக மாறிவிட்டார்கள்? அடிப்படைக் காரணம் என்ன? What is the root cause behind the sick society? சிந்தனையைத் தூண்டும் வண்ணம் விமலின் கட்டுரை இன்று சமூகத்தைப் பீடித்திருக்கும் பெரும் பிணி ஒன்றை விபரமாக ஆராய்ந்துள்ளது.

**- பராசக்தி சுந்தரலிங்கம்**
**(அவுஸ்திரேலியா)**

### ஈழத் தமிழினத்தின் தலைவிதி!

‘ஜெனிவா என்பது தமிழருக்கு ஒரு தொடர்கதைதான்!’ என்பது ஈழத் தமிழருக்கு ‘பனங்காட்டான்’ வழங்கியுள்ள புத்தாண்டுச் செய்தியாகவே எண்ணுகிறேன். இப்படி இழுத்தடிப்புகள் தொடரத்தான் போகிறது. தேர்தல்கள் வரும்; வாக்குறுதிகள் அள்ளி வழங்கப்படும். போராட்டங்கள் வெடிக்கும் என்று எச்சரிக்கைகள் முழங்கும். ஒன்றுமே நடக்காது. இதுதான் ஈழத் தமிழினத்தின் தலைவிதி!

**- க. அரசரத்தினம்**
Hayes

### வரதகுமார் மறைவுக்கு அஞ்சலி

தமிழர் தகவல் நடுவத்தின் வரதகுமாரின் மறைவு மிகுந்த கவலையை அளிக்கிறது. தன்னை முழுமையாக அர்ப்பணித்து உழைத்தவர். அப்படி ஒரு சிலரைத்தான் இறைவன் இந்தப் பூமிக்கு அனுப்பி வைக்கிறான். தங்களைக் கொஞ்சம்கூடக் கவனிப்பதில்லை. ‘புதினம்’ இதழும் அவ்விதமான ஒரு பணியையே செய்கிறது. வியாபார நோக்கற்று தமிழர்களின் நலன்களுக்காக சேவையாற்றுகின்றவர்கள் எவரென்றாலும் அவர்களை வாழ்த்தி வணங்க வேண்டும். மறைந்த வரதகுமார் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

**- கே.எஸ். குணசிங்கம்**
Wimbledon

### யதார்த்தமான ஆலோசனை

‘ஹோமியோபதி’ வைத்திய நிபுணர் ஆர். தியாகராஜனின் கட்டுரைகளை விரும்பிப் படிப்பேன். இம்முறை ‘பதற்றம்’ பற்றி அவர் எழுதியுள்ள விஷயங்கள் என்னுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்வது போன்று இருந்தது. தெளிவாக அவரது ஆலோசனைகள் உள்ளன. யதார்த்தமாகச் சொல்கிறார். அவருக்கு எனது நன்றிகள்.

**- எஸ். ராஜசுந்தரம்**
Croydon

‘சிவபூமி’ அறக்கட்டளை மூலம் யாழ்ப்பாணத்தில் ஆன்மிகத் தொண்டர் ஆறு திருமுருகன் ஆற்றுகின்ற பணிகளைக் கடந்த இதழில் படித்து அறிய முடிந்தது. இலண்டனில் அவர் ஆன்மிகச் சொற்பொழிவாற்றிய போது கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

சிவ தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் துர்க்கை அம்மன் பணியை அவர் செய்வதை கேள்விப்பட்டிருக்கிறேன். சிவபூமி முதியோர் இல்லத்தையும், மனவிருத்தி குறைந்த பிள்ளைகளுக்கான சிவபூமி பாடசாலையையும் நடத்தி அவர் ஆற்றுகின்ற பணியை பாராட்டாமல் இருக்க முடியாது. மிகச் சிறந்த பணி செய்கிற அவரை வாழ்த்துகிறேன்.

**- சு. கந்தசாமி,** Eastham

### நிஜங்கள் பேசுகின்றன

நிஜத்தை எழுதுவதால் வவுனியூர் இரா. உதயணனின் புலம்பெயர் கதைகளை ஒவ்வொரு இதழிலும் தவறாமல் படிக்கிறேன். வயதான காலத்தில் வெளிநாட்டில் இருக்கும் பிள்ளைகளின் உதாசீனத்தால், பெற்றோர்களின் மனதின் அவஸ்தைகளை மிக அழகாக படம் பிடித்துக் காட்டுவது போல், அவரது கதைகள் இருக்கின்றன.

புலம்பெயர் வாழ்வில் இடம்பெறுகிற அவலங்களை எழுதுகின்ற, மண்ணை நேசிக்கின்ற எழுத்தாளரின் பங்களிப்பு மதிக்கப்பட வேண்டியது.

**- கந்தையா சுசீந்திரன்**
Ilpord

### வாழும் போதே கௌரவம்

‘வாழும் போதே வாழ்த்த வேண்டும்’ என்பதைக் கருத்திற்கொண்டு புலம்பெயர்ந்த தேசங்களில் பல பொதுத் துறைகளில் தொண்டாற்றியவர்கள் கௌரவிக்கப்படுவது பாராட்டப்பட வேண்டிய நிகழ்வாகும்.

நாடகத் துறையில் தாயகத்திலிருந்து இலண்டன் வரை தொடர்ச்சியான நாடகப் பங்களிப்பைச் செய்து வருபவர் கலைஞர் பாலேந்திரா. தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தை ஆரம்பித்து இப்போது இலண்டனில் இயங்கிக் கொண்டிருக்கும் அவரது குடும்பத்தார், உறுப்பினர்களின் அர்ப்பணிப்பான உழைப்புக்கு ‘புதினம்’ தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவு கண்டு மகிழ்ந்திருக்கிறோம்.

சமீபத்தில் இலண்டன் எசெக்ஸ் தமிழ் கழகமும், அதன் தமிழ் பாடசாலையும் தனது 20-ஆவது ஆண்டு விழாவில் பாலேந்திராவுக்கு வாழ்நாள் சாதனை விருது வழங்கி கௌரவித்திருப்பதை தங்கள் பத்திரிகையின் மூலமாக அறிந்து பெருமைப்பட்டேன். அந்தச் செய்திக்கு ‘புதினம்’ அளித்துள்ள முக்கியத்துவம், ஈழத்துக் கலைஞனுக்கு வழங்கப்பட்ட மற்றொரு கௌரவமாகவே கருதுகிறேன்.

**- க. குலசேகரம்பிள்ளை,** Watford


டாக்டர் கதிர் துரைசிங்கம் (கனடா)

# நம்மவருக்குப் பெருமை சேர்த்த மறைந்த கலைஞர் விஜயசிங்கம்











பன்னாலை-தெல்லிப்பழையில் வாழ்ந்த திருவருள்-சின்னத்தங்கம் தம்பதிகளின் பிள்ளைகள் எண்மரில் ஒருவர் இவர். மறைந்தாலும், நம்மவருக்குப் பெருமை சேர்ப்பவராகவே திகழ்கிறார். 1938-ல் பிறந்த விஜயசிங்கமும் நானும் 1946-ல் ஒரே வகுப்பு மாணவர்களாக பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையில் ஆரம்ப கல்வி கற்க ஆரம்பித்து பின்னர் மகாஜனாக் கல்லூரியில் 1956 வரை கல்லூரி மாணவர்களாகத் தொடர்ந்து ஏழு தசாப்தங்களாக நண்பர்களாக தொடர்பில் இருந்தோம்.



1950-களில் மகாஜனா கல்லூரியின் சிறந்த விளையாட்டு வீரராக விஜயசிங்கம் விளங்கினார். *Adigar* இல்லத்தைச் சார்ந்த இவர் பங்கு பற்றாத ஓட்டப் போட்டிகள் இல்லை என்றே சொல்லலாம். ஓட்டப் போட்டிகள் உயரப்பாய்தல் ஆகியவற்றில் முதல் இடம் அனேகமாக வகித்த இவர் 1953-ல் இல்ல விளையாட்டு அணித் தலைவராகவும் (*Athletic Captain*), 1955-ல் இல்லத் தலைவராகவும் (*House Captain*) திகழ்ந்தார். 1957-ல் கல்லூரி விளையாட்டு சாதனை வீரராக (*Athletic Champion*) தெரிவு செய்யப்பட்ட இவர் யாழ் கல்லூரிகளுக்கு இடையிலான (*J.S.S.A*) விளையாட்டுப் போட்டியில் உயரப்பாய்தலில் சாதனை நாட்டியிருந்தார். மகாஜனாக் கல்லூரி *2nd Eleven* உதை பந்தாட்ட அணித்தலைவராக 1954-ல் பணியாற்றிய இவர் தொடர்ந்து வந்த மற்றைய ஆண்டுகளில் *1st Eleven* அணியில் விளையாடினார்.



அதிபர் தெ.து.ஜயரத்தினம் அவர்களின் அபிமானத்துக்குரியவரான விஜயசிங்கத்தின் மறு பக்கம் நடிப்புக்கலையாகும். ஆண்டு தோறும் இடம் பெறும் கல்லூரி ஸ்தாபகர் தின நிகழ்வின் நாடகங்களில் கதாநாயகனாக இவர் நடித்தவை துரோகி யார்?, ராஜ ராஜ சோழன், அம்பிகாபதி ஆகியவை. 1955-ல் இல்லங்களுக்கிடையே நடந்த நாடக போட்டிகளில் இவர் கதாநாயகனாக நடித்த அஞ்சுகம் நாடகம் முதற் பரிசு பெற்று இவருக்கு சிறந்த நடிகருக்கான விருதையும் பெற்றுக்கொடுத்தது. பன்னாலை கணேச சனசமுக நிலைய நிதி சேகரிப்புக்காக இவர் நடித்த நாடகங்கள் அமரசிற்பியும் நிராசையுமாகும்.



நடிப்பிலும் திரைத்திறையிலும் மோகம் கொண்ட இவர் 1959-ல் சென்னை சென்று தேவர் பிலிம்ஸில் சாதாரண ஊழியராக இணைந்தார். விஜயசிங்கத்தின் திறமையையும் கடின உழைப்பையும் கண்ட சின்னப்பா தேவர், எம்.ஏ.திருமுகம் இயக்கிக் கொண்டிருந்த எம்.ஜி.ஆரின் தாய் சொல்லைத் தட்டாதே திரைப்படத்திற்கு உதவியாளராக நியமித்தார். விஜயசிங்கம் உதவி இயக்குனராகவும், துணை இயக்குனராகவும் 25 படங்களில் பணியாற்றிய பின்னர் இணை இயக்குராகி 19 திரைப்படங்களில் பணியாற்றினார்.

விஜயசிங்கத்தின் செயற் திறனை உணர்ந்த தேவர், பணம் பத்தும் செய்யும் என்ற திரைக்கதையை இயக்கும் பணியை இவரிடம் ஒப்படைத்தார்.

விஜயசிங்கத்தின் இயக்கத்தில் 1985-ல் வெளிவந்த பணம் பத்தும் செய்யும் திரைப்படம் 100 நாட்கள் கடந்து வெற்றி நடை போட்டு சாதனை படைத்தது. தொடர்ந்து இவர் இயக்கத்தில் வெளி வந்த படங்கள் பிறந்தேன் வளர்ந்தேன், எங்க ராஜா, கிளி ஜோஸ்யம், பஸ் கண்டக்டர், எல்லாம் பணத்துக்காக ஆகியன தயாரிப்பாளரின் திருப்திக்கு ஓடிய படங்கள். முன்னணி நடிகர்கள் பலருடன் பணியாற்றும் சந்தர்ப்பம் இவருக்குக் கிடைத்தது. எம்.ஜி.ஆர், ஜெமினி கணேசன், ரஜினிகாந்த், ஜெய்சங்கர், ஏவி.எம். ராஜன், சிவகுமார், சாவித்திரி, ஜெயலலிதா, கே.ஆர். விஜயா, சௌகார் ஜானகி, சுஹாசினி என்று பல



பிரபலங்களுடன் நடிக்கும் வாய்ப்பும் கிட்டியது.

இவர் பணியாற்றிய 60க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் சில:- தாய் சொல்லைத் தட்டாதே, தாயை காத்த தனயன், தர்மம் தலை காக்கும், வேட்டைக்காரன், முகராசி, தனிப்பிறவி, விவசாயி, நல்ல நேரம், துணைவன், நேர்வழி, வெள்ளிக்கிழமை விரதம், ஆட்டுக்கார அலமேலு, அன்னை ஓர் ஆலயம், தாயில்லாமல் நானில்லை, அபூர்வ சகோதரிகள்.

மூன்று பெண் பிள்ளைகளுக்குத் தந்தையான விஜயசிங்கம் மனைவி லீலாவதியுடனும், மூன்று பிள்ளைகளுடனும் 2011-ல் லண்டனில் குடியேறினார். சிறிது காலம் சுகவீனமுற்று இருந்த விஜயசிங்கம் இலண்டனில் 2019 மார்ச் மாதம் 19-ல் காலமானார்.



பவானி ரவீந்திரன்







## திருமுருகன் உருவாக்கிய அரண்மனை

# பிரமிக்க வைத்த அதிசய மாளிகை

### ‘திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்’

தாயகத்திற்கு கடைசியாக லண்டனிலிருந்து போனபோது, “நாவற்குழியில் திருவாசக ‘அரண்மனை’ ஆறு திருமுருகன் கட்டியுள்ளார், பார்த்து வா” என்று அண்ணா (புதினம்) சொன்னார். ‘இது என்ன திருவாசக அரண்மனை, அப்படியும் ஒன்று கட்டலாமா?’ என்று எனக்குள் யோசனை. திருமுருகன் என்று சொல்லிவிட்டார், போகாமல் வரமுடியுமா?

ஒருநாள் நானும் எனது கணவருமாக புகுந்த இடம் சங்கானையிலிருந்து யாழ் நகருக்கு பஸ்ஸில் போனோம். பின்பு நாவற்குழிக்குப் போகிற பஸ்ஸில் ஏறினோம். நான் முன்பின் நாவற்குழிப்பக்கம் போனது கிடையாது. எனது இளமைப் பருவம், உழைப்பு, இன்ப துன்பம் எல்லாம் பிரித்தானிய மண்ணுக்குரியது. என் பாசமெல்லாமே யாழ் மண்ணுக்குரியது. A9 வீதியிலுள்ள திருவாசக அரண்மனை முன்பு பஸ் எங்களை இறக்கிவிட்டது. சன நடமாட்டம் இல்லாத ஊராகத் தென்பட்டது. மழைகாலம் இயற்கை அழகோடு நாவற்குழி இருந்தது. நல்ல காற்று வீசியது!



அரண்மனை வளாகத்திற்குள் சென்றோம். விபரிக்க முடியாத, அமைதியான தியானம் செய்யக்கூடிய சூழல். அரண்மனையைக் கண்டேன். பிரமித்துப் போனேன்; ஆனந்தம் அடைந்தேன். அப்போது என் மனதில் தோன்றியது, உலக அதிசயங்களான தாஜ்மகாலையும், எகிப்திய நாட்டில் உள்ள பிரமிட்டையும் (Phyramid) விட இந்த அரண்மனை மேலானது. தாஜ்மகாலை ஷாஜகான் தன் இறந்து போன காதல் மனைவிக்காக கட்டினான். எகிப்தில் ‘பிரமிட்’டை இறந்துபோன மன்னர்களின் சடலத்தைப் பாதுகாப்பாக வைக்க கட்டினார்கள். இவையெல்லாம் சுயநலக்காரணங்களுக்காக கட்டப்பட்டவை. ஆனால், திருவாசக அரண்மனை உலகம் முழுவதும் வாழும் நம் மக்களுக்காக, யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழரின் அடையாளமாக உள்ளது.

அரண்மனை வளாகத்தில் அடிப்பகுதி நீர் நிறைக்கப்பட்ட 21 அடி உயரமான சிவலிங்க கருங்கல் தேர் இருக்கிறது. நந்தியும் இருக்கிறார். கருங்கல் மண்டபத்தில் தெட்சிணாமூர்த்தியும், பிரதிட்சை செய்யப்பட்டுள்ளார்.

சிவலிங்க மண்டபத்திற்குள் சென்றோம். மண்டபத்தின் தூண்கள் மரத்தாலானது. வரலாற்று அடையாளமாக உள்ளது. மண்டபத்தில் 108 சிவலிங்கம் பிரதிட்சை செய்யப்பட்டுள்ளது. 108 லிங்கங்களுக்கு மணிகள் மேலாக உள்ளது. மண்டபத்தின் பின்புறத்தில் திருவாசக ஆராய்ச்சி நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. பின்புறச் சுவரில் திருவண்ணாமலை, இமயமலை, உத்தரகோசமங்கை, திருவாரூர் கோவிலின் படங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. மாணிக்கவாசகரால் அருளிச் செய்யப்பட்ட திருவாசகத்தில் 51 அதிகாரங்கள் உள்ளன. 51 கருங்கற்களில் 658 பாடல்களும் ஒவ்வொரு எழுத்தாக நேர்த்தியாக கைகளினாலே உளியால் செதுக்கப்பட்டுள்ளது. 11 மொழிகளில் சிவபுராணம் கருங்கற்களில் பொறிக்கப்பட்டுள்ளது. திருவாசகத்தை கற்களில் பொறித்த கலைஞர்களின் அயராத உழைப்பும் திறமையும் கண்முன்னே நின்றது.




திருவாசகத்தை வாசித்தபடியும் படங்களில் பதிவு செய்தபடியும் மண்டபத்தை வலம் வந்தேன். மாணிக்கவாசகரை நினைத்தேன். நான் ஒரு ஞானப்பழமுமில்லை, சமய இலக்கியம் பெரிதாக தெரிந்தவளுமில்லை, சாதாரண 4 குழந்தைகளின் தாய். விஞ்ஞானரீதியாக யோசிப்பவள். கடிகாரம் பார்த்து காரியம் செய்பவள். இந்து சமய ஆசிரியர் திருமதி ரட்ணம் சொல்லித்தந்தது மட்டும் தான் தெரியும். கல்லில் பொறிக்கப்பட்டிருந்த ‘வெந்துவிடும் உடல் பிறவி மெய் என்று பெருக்கி...’ என்ற திருவாசக வரி என்னை சிந்திக்க வைத்தது.

மண்டபத்தை பார்த்தபிறகு ஞானக்குருவான தெட்சணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்தோம். மேலும் கோவிலில் பூசை செய்யும் நிருபன் குருக்கள் ஐயாவிடம் அரண்மனை பற்றிய தகவல்களை அறிய விரும்பினேன். அவருடன் பேசினேன். எனது கேள்விகளுக்கு பொறுமையோடு பதில்கள் சொன்னார். நிருபன் குருக்கள் ஐயா, வல்வை சிவன் கோவில் குருக்கள் மனோகர் ஐயாவின் மகன். எங்கள் அம்மா ஊரில் வாழ்ந்த காலத்தில் ஒவ்வொரு வெள்ளியும் வல்வை சிவன் கோவிலுக்கும் போவார். மனோகர் ஐயாவும் அங்கே இருந்தார். அவரைக் கண்டதில் மகிழ்வடைந்தேன். “ஆறு திருமுருகன் ஐயா அவர்கள் திருச்செந்தூரில் சொற்பொழிவு ஆற்றிவிட்டு வரும்போது அங்கே இருந்த சித்தர் ஒருவர் கொடுத்த செய்தியே இந்த அரண்மனை கட்டுவதற்கு காரணம் என அறிந்தேன். அவுஸ்திரேலியாவில் வாழும் டாக்டர்கள் மன்மோகன் சிவகௌரி தம்பதிகள் நிலத்தையும் நிதியையும் வழங்கியுள்ளார்கள். பல அன்பர்களும் உதவி செய்துள்ளார்கள். கிளிநொச்சியை சேர்ந்த ஆனந்தன் வினோத் என்பவரும், அவரோடு சேர்ந்து 33 பேர்களும் வீடு வாசலுக்குப் போகாமல், இரவு பகல் பாராது கையாலேயே ஒவ்வொரு எழுத்தாக உளியில் செதுக்கியுள்ளார்கள். இதைவிட இவ்வரண்மனைக்கு பல்வேறு விதங்களில் பல கலைஞர்களின் பங்களிப்பு இருக்கிறது. ஆனி மாதம் 2018ல் திறக்கப்பட்டது.






இராவணன் இலங்கை முழுக்க சிவலிங்கம் வைத்து வணங்கினான். ஆனால், இன்று யாழ்ப்பாண குடா நாட்டில் கீரிமலை நகுலேஸ்வரர் கோவிலில் 108 சிவலிங்கங்கள் இருக்கிறது. அடுத்ததாக திருவாசக அரண்மனையில் 108 சிவலிங்கங்கள் உள்ளன. இலங்கையில் ஞானகுருவான தெட்சிணாமூர்த்திக்கு திருவாசக அரண்மனையில் மட்டும்தான் கோவில் உள்ளது. கோவிலில் மூன்று கால பூசைகள் நடப்பதாகவும் நிருபன் ஐயா சொன்னார்.

ஈழத்தமிழர்கள் உலகமெல்லாம் வாழ்கிறோம். குழந்தைகளை வெற்றியாளர்களாக வளர்க்க முயற்சிக்கிறோம். உதாரணங்கள் பலரைக் காட்டுகிறோம். அதில் ஒருவிதமான பிழையுமில்லை. வாழ்க்கை என்றால் அப்படித்தான். சித்தர் கொடுத்த செய்தியால் ஆறுதிருமுருகன் அவர்கள் அரண்மனையைக் கட்டினார். மாபெரும் பணிகள் செய்கிறார். இப்படியும் ஆட்கள் உலகில் இருக்கிறார்கள் என்று எமது குழந்தைகளுக்கு சொல்ல வேண்டும். மூன்றாவது தலைமுறையும் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். தாயகத்திற்கு போகும்போது பேரக்குழந்தைகளையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு, இப்படியான இடங்களை தரிசிக்க வேண்டும். எமது அம்மாவின் அம்மா, அம்மம்மாவின் அம்மா நாங்கள் சுகமாக வாழ எவ்வளவோ கஷ்டப்பட்டுள்ளார்கள். சமூகத்திலிருந்து எடுத்ததை திருப்பிக் கொடுப்பதற்கும் ஒரு கடமையும் பொறுப்பும் இருக்கிறது. இதுவே நம் மூதாதையருக்கு நாம் செய்யும் நன்றிக் கடன்.

அந்நியர் எமது மதத்தையும் மொழியையும் அழிக்க முற்பட்டபோது மக்கள் விக்கிரகங்களை கிணற்றுக்குள் ஒளித்து வைத்தார்கள். திருநீறு பூசவும் வாழையிலையில் சாப்பிடவும் பயந்த காலத்தில் ஆறுமுகநாவலர் கடவுளால் அனுப்பப்பட்டு சைவத்தையும் தமிழையும் காப்பாற்றினார். போரால் பலதையும் இழந்து நிற்கிறோம். எம் அடையாளத்தை இழக்காமல் தனி அடையாளமாக நிற்கிறது திருவாசக அரண்மனை. காலம் கடந்தும் நிற்கும். ஆறுமுகநாவலரை சைவமும் தமிழும் மறக்கவில்லை. அதேபோல ஆறு.திருமுருகன் அவர்களையும் தமிழும் சைவமும் என்றும் மறக்கமாட்டாது. அவரை வரலாறு நன்றியோடு போற்றும். மாணிக்கவாசகரின் திருவாசகமும் பத்திரமாக இருக்கும்.

‘மேன்மைகொள் சைவநீதி விளங்கும் உலகமெல்லாம்’ ●

# சைவத்திற்கும் தமிழுக்கும் ஒரு தியாகமூர்த்தி!

## 80வது அகவை விழாவில் புகழ்மாலை









சமய குரவர் நால்வரது பஞ்ச லோக சிலைகளையும் அருள்மிகு விம்பிள்டன் கணபதி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யும் பணியை மனநிறைவோடு பூர்த்தி செய்தவர் அன்பர் கந்தையா தியாகமூர்த்தி.

சமய குரவர் நால்வரும் இந்த மேடையில் காட்சி தரதியாகமூர்த்தியின் 80வது அகவை விழா கொண்டாடப்படுவது மகிழ்ச்சி தருகிறது என விழாவிற்குத் தலைமை தாங்கிய விம்பிள்டன் பிள்ளையார் ஆலய ஒருங்கிணைப்பாளர் வைத்திய கலாநிதி ச.மகேஸ்வரன் பாராட்டுத் தெரிவித்தார்.

சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றும் இவர் சென்ற பத்தொன்பது வருடங்களாக இந்த ஆலயத்தில் திருவாசக முற்றோதலை நிறைவு செய்த பெருமைக்குரியவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் சைவ வினாவிடை நூலை ஆங்கிலத்திற்கு சகாதேவனுடன் இணைந்து மொழி பெயர்த்து சைவ மக்களுக்கு வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும் எனவும் மகேஸ்வரன் கூறினார்.



உயர்வாசற்குன்று முருகன் ஆலயத் தலைவர் அ.வைரவமூர்த்தி பேசுகையில், ஆலயத்தில் சமய குரவர் நால்வரினது சிலைகளை பிரதிட்சை செய்தது பற்றியும், மற்றும் அளவெட்டி தவளகிரி முத்துமாரி அம்மன், அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதய வித்தியாலய புனருத்தாபன வேலைகட்கு நன்கொடைகள் வழங்கி உதவி செய்தமைக்கு நன்றி தெரிவித்தார்.



தியாகமூர்த்தி அவர்கள் பத்து வருடங்களாகக் கடமையாற்றிய இலிங்கன் கல்லூரி முன்னாள் அதிபர் முனைவர் அலன் கிறீஸ் பேசுகையில் தியாகமூர்த்தி பத்து வருடங்களில் பல குடிசார் எந்திரர்களை பயிற்றுவித்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

சைவப் பெரியார் வழக்கறிஞர் சிதம்பரப்பிள்ளை தனது உரையில் மூர்த்தி சைவ மாநாடுகளில் வழங்கிய சைவ நெறிப் பேச்சுக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இலண்டன் சிவன் கோயில் ஸ்தாபகர் ந.சச்சிதானந்தன் தமது உரையில் தியாகமூர்த்தி முதலாவது சைவ மாநாட்டில் விபுலானந்த அடிகளார் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய தொண்டு பற்றி நினைவு கூர்ந்தார்.

கலாநிதி பொன் பாலசுந்தரம் தமது உரையில் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றும் தியாகமூர்த்தி சமயத்திலும், தமிழ் மொழியிலும், பாண்டித்தியம் பெற்றிருப்பது நமக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாகும். இந்த இடைவெளியை லண்டனில் நிரவல் செய்ய இவர் ஒரு நடமாடும் அறிஞராக இருப்பதையிட்டு நான் பெருமைப்படுகிறேன் என்றார்.

தியாகமூர்த்தி அவர்களுடன் மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றும் திருமதி சாந்தி செல்வராசா, யாழ்ப்பாணத்திலுள்ள இளவாலை திருக்குடும்ப மடப் பள்ளிக்கூடம் உட்பட பல பாடசாலைகளுக்கும் இவர் நன்கொடைகள் வழங்கி ஆதரித்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

ஆன்மிக பேச்சாளர், எழுத்தாளர் மாசிலாமணி, தியாகமூர்த்தியின் எழுத்து வன்மை பற்றிக் குறிப்பிடுகையில், அண்மையில் கலசம் பத்திரிகையில் எழுதிய ‘ஆவுடையார்’ ஆலயக் கட்டுரை, மாணிக்கவாசகரின் சமயப் பணியைப் பிரதிபலிப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்.

தியாகமூர்த்தி அவர்களின் ஊரவரான திரு.பூதத்தம்பி ராஜ்குமார் பேசும்போது, தியாகமூர்த்தி அவர்கள் கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலய வகுப்புக்களை திருத்தி அமைப்பதற்கு வழங்கிய நன்கொடைக்கு நன்றி தெரிவித்தார்.

தியாகமூர்த்தி அவர்களின் பேரன் கஜன் கோகுலன் பேசுகையில், தன்னை ஒரு பேச்சாளனாகப் பயிற்றுவித்து பேச்சுப் போட்டி ஒன்றில் முதல் பரிசு பெற வைத்த ‘அப்பு’விற்கு நன்றி கூறிச் சபையோரின் பாராட்டைப் பெற்றார்.



விம்பிள்டன் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவை திருமதி (வைத்தியர்) செல்வமணி தியாகமூர்த்தி அவர்கள் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். டாக்டர் மகேஸ்வரன் அவர்களின் தேவார பண்ணிசையுடன் ஆரம்பமாகிய இவ்விழா அவரின் பண்ணிசையுடன் நிறைவுற்றது.


சைவமும் தமிழும் தமது இரு கண்களாக போற்றிப் பேணும் பெரியார் தியாகமூர்த்தியின் அர்ப்பணிப்புடனான சேவைக்கு பிள்ளையார் ஆலயத்தில் அளிக்கப்பட்ட நிறைவான புகழ்மாலைகளும் மதிய விருந்து உபசாரமும் மனதையும் வயிற்றையும் நிறைத்தது. ●






# ஜேர்மனியில் ‘வாகைமயில் - 2019’

ஜேர்மனியில் நடனக் கலைஞர்களின் ஆற்றலை வெளிக் கொண்டு வரும் நோக்கில் நடாத்தப்படும் மாபெரும் பரதநாட்டியம் ‘வாகைமயில் - 2019’ இவ்வாண்டும் ஜேர்மனி தமிழ் பெண்கள் அமைப்பினால் எசென் நகரில் நடாத்தப்பட்டது. பல்வேறு பிரிவுகளாக பெருந்தொகையான ஜேர்மனியிலுள்ள நடன ஆசிரியைகளின் மாணவிகள், இப்போட்டிகளில் பங்கு பெற்றனர். தாயகத்திலும், புலம்பெயர்ந்த தேசங்களிலுமுள்ள பிரபலமான நடன ஆசிரியைகளான சுவிஸ் மதிவதனி சுதாகரன், ஈழம் நல்லினி சிவராஜ், பிரான்ஸ் ஜெயரஞ்சி, தாரணி, லண்டன் ஜெயந்தி யோகராஜா, ராகினி ராஜகோபால், சுமித்திரா சுகேந்திரா ஆகியோர் நடுவர்களாகக் கலந்து கொண்டனர். தனி குழு என்ற பிரிவுகளில் நடாத்தப்பட்ட இப்போட்டிகளில் ‘வாகைமயில்கள்’ தெரிவு செய்யப்பட்டு விருதுகள் பிரமாண்ட விழாவில் வழங்கப்பட்டன.



ஈழ மக்களின் பேராதரவுடன்
CANADA, FRANCE, NORWAYஐ
தொடர்ந்து ENGLAND ல்
PS
CINE ARTS
Presents
1 JUNE
SATURDAY
19:00hrs
BOLEYN CINEMAS
7-11 barking road,
East ham, London
E61PW
2 JUNE
SUNDAY
13:30hrs
SAFARI CINEMA HARROW
2 Station Rd, Harrow
London, HA1 2TU'
Contact : +44 7951 950843 / www.oliparappu.com
தமிழீழ தமிழக கனடிய கலைஞர்களின் உருவாக்கத்தில்
யாழ் மண்ணிலும் கனடிய மண்ணிலும் படமாக்கப்பட்ட
முதல் திரைப்படம்
ஒருத்தி
A Ps Suthakaran Film
Jeevanram | Pravinkumar | Eswaramoorthy
Theepan | Ramalingam | Janakan | Ku Karthick - Vadivarasu - Kirunthuja
Dimple - Sham Waran | Krishna - Prima Dance | Roshita - David | Designs Kumarraja